மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 4 சுற்றம் : 1 சனவரி 2016 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி




பொங்கல் சிறப்பிதழ்



இசையைப் போலவே இனிமையானவர் கிருஷ்ணா



## ஏறுதழுவுதல் உணர்வு மிக்கக் கடமை

சேர்வோம் உயர்வோம் !

# செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்

அரசு பதிவு எண்: 70/2015.



## அனைவர்க்கும் தமிழ்ப்புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துகள்



விசவனூர் .வே.தளபதி
தலைவர்



எஸ்.ரங்கநாதன். BSc.,
செயலாளர்



S.V.Jai.இமயவரம்பன்.B.sc.,M.A.,B.L.,Ph.D.,
பொருளாளர்

**ஊடகவியலாளர்கள் உரிமைகளைக் காப்போம் !**
**உலகம் வியக்க ஒன்றாய்த் திரள்வோம் !**

செய்தி ஊடக நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.
உறுப்பினராகுங்கள்,
நமக்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுப்போம்.

இடம்: செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்
எண் 124, என்.டி.ஆர். தெரு, இரங்கராசபுரம்,
கோடம்பாக்கம், சென்னை 600 024.
தொலைபேசி: 044-42154408, அலைபேசி : 8056281973.

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly January 2016

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**டி. வி. ரமணி**
**குமார் செங்கல்பட்டு**
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**த. சுஜாதா** பி.காம்., எம்.பி.ஏ.,
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

உணர்வுமிக்க கடமை
*தலையங்கம்* ....4

விடியலை நோக்கி (சிறுகதை)
*தரா கார்த்திகை* ....6

சீவகசிந்தமணி
அறிமுகம்.... 9

கொலை பாதகம்
*வேர்மகள்*.... 11

தற்காப்பு (சிறுகதை)
*கி.சி. ஆனந்தவேலன் (ஜெயமதி)*.... 13

இசையைப் போலவே இனிமையானவர்
*கிருஷ்ணா* ....17

கவிதை.... 21

உண்மையைத் தேடி (13)
*இராஜாசிங்* ....23

மண்பானை அவசியமும்
பொங்கல் பண்டிகையும் ....28

கிறித்தவரும் ஊரும் பேரும்
*பாவலர் சீனி சுந்தரமூர்த்தி*.... 29

அச்சுறுத்தும் காற்று வணிகம்
*கி.வெங்கட்ராமன்*.... 30

தமிழர் திருநாள் குறிப்புகள்....33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



ஏறுதழுவுதல் என்ற தமிழரின் பண்பாட்டு பழக்கத்திற்கு தடை. அதை உடைக்க தமிழர்கள் படும்பாடு பெரும்பாடாக இருக்கிறது. இந்நிலை யில்தான் தமிழரே தங்களை ஆள வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெறத் துடிக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் கடைபிடித்து வரும் ஒரு பழக்கத்தை தடை செய்ய இவர்கள் யார்? விலங்குகளை வதைக்கக்கூடாதாம். நீங்கள் மனிதர் களை வதைக்கிறீர்கள். தமிழர்கள் விலங்குகளை வாழ வைக்கிறார்கள். விலங்குகளை வதைக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் அழிக்கத் துடிக்கிறார்கள். இந்த அயோக்கியத் தனத்தை எங்கே போய் சொல்வது.

உழவை அழித்துவிட்டு, உழவு மாடுகளை அடிமாடுகளாக விற்று அழித்துவிட்டு, இன்று உழவு மாடுகளே இல்லாத அவலமான ஒரு சூழலை தமிழகத்தில் கொண்டு வந்துவிட்டார்கள். சரி அதுதான் போகட்டும் என்றால் ஜல்லிக்கட்டு நடத்தக்கூடாதாம். ஜல்லிக்கட்டு நடத்தவில்லை என்றால், காளைமாடுகளை ஏன் வளர்க்க வேண்டும்? தமிழன் தானாகவே மாடுகளை வளர்ப்பதை விட்டு விடுவான். தமிழரின் வாழ்வில் ஒன்றாகக் கலந்துவிட்ட மாடுகளை அழித்துவிட்ட பெருமை அயல்நாடுகளின் கைக்கூலிகளுக்கு வந்து சேரும். அவர் போடும் பிச்சையில் புல்லுருவிகள் வாழ்ந்து? கொண்டிருப்பார்கள். இதற்குத்தான் இந்தத் தடை.

ஏறுதழுவுதல் நிகழ்விலே பன்னாட்டு அரசியலும் விளையாடுகிறது. நேற்று இன்று அல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பே துவக்கிவிட்டார்கள் இதை. நாம் அன்றாடம் பயன்படுத்தும் பசும்பாலில் அது தொடங்குகிறது. பொதுவாக பால் என்று எடுத்துக்கொண்டால் இருவகைப்பால் உண்டு என்கிறார்கள். உலகத்திலுள்ள அனைத்துப் பாலூட்டிகளிலும் சுரக்கும் பால் ஒரு வகை. செரிமானம் ஆகக்கூடிய

# உணர்வுமிக்கக் கடமை



ஒன்று. இதில் மனித தாய்ப்பாலும் அடக்கம். தாய்ப் பாலுக்கு தட்டுப்பாடு வரும்போதுதான் குழந்தை களுக்கு பசும்பாலை புகட்டுகின்றனர் தாய்மார்கள்.

பால் ஒரு வர்த்தகப் பொருள் என்று ஆனபின்பு பாலின் தன்மையில் நஞ்சு கலக்கத் தொடங்கி விட்டனர் அயல்நாட்டார். எப்படி என்றால், ஐரோப்பியர்கள் அதிகமாக பால் தரக்கூடிய வகையில் மாடுகளுக்கு மருந்துகளைச் செலுத்தி வளர்த்தனர். சாதாரணமாக ஒரு பசு தனது கன்றைப் பார்த்து அதற்கு பால் தரவேண்டும் என்ற உந்துதலில் பாலைக் கொடுக்கும். அந்த உணர்வைத் தரும் இயக்குநீரை (ஹார்மோன்) உருவாக்கி, கன்று இல்லாமலேயே ஊசி மருந்து மூலம் பசுவிற்கு கொடுத்து பாலக் கறந்து விடுகின்றனர். இந்த ஊசியால் ஏற்றப்படும் மருந்து நஞ்சாக மாறுகிறது. சுவையும் மாறுகிறது. சர்க்கரைநோய், புற்றுநோய் போன்ற நோய்கள் உருவாவதற்கு காரணமாக அமைகின்றது. தவிர பல நோய்களைத் தோற்று விக்கக் கூடியதாகவும் மாறிவிடுகிறது. இது மட்டுமல்லாது நோய் எதிர்ப்பு சக்தியும் இல்லாமல் போய்விடுகிறது. மாட்டுக்குச் செலுத்தும் மருந்தில் ஈஸ்ட்ரோஜன் கலந்து விடுவதால், இந்தப் பாலை குடிக்கும் பெண்குழந்தைகள் சிறுவயதிலேயே பூப்படைந்துவிடுகிறார்கள் என்றும் மருத்துவர்கள் கூறுகிறார்கள். இது மட்டுமல்லாது எதிர்பாலினரை ஈர்க்கும் விதத்தில் செயல்படவும் அதன் மூலம் தவறான நிகழ்வுகள் நிகழ்ந்திடவும் இவை காரணமாக இருக்கின்றன. ஆண் குழந்தைகளுக்கு சோம்பேறித்தனத்தையும் பாலின சமநிலை மாற்றங்களையும் திருநங்கைகளாக மாறும் எண்ணங்களையும் உடல்மாற்றங்களையும் ஏற் படுத்துகிறது என்று சொல்லப்படுகிறது. அதிகமாக பால் கிடைக்கிறது என்பதற்காக அம்மாதிரியான மாடுகளை நாமும் வளர்க்கத் தொடங்கிவிட்டோம்.

பால் குறைவாகக் கொடுத்தாலும் நமது மண்ணின் பசுக்கள் தரும் பால்தான் மிகச்சிறந்த ஒன்று. உடல் நலத்திற்கு ஏற்றது. தீமை செய்யாதது அதை நாம் தவிர்ப்பது அறிவுடைமை ஆகாது. நமது மாட்டினங்களின் பால் மட்டுமல்ல. அவை தரும் கழிவுகள் விவசாயத்திற்கு மிகவும் உதவி கரமாக அமைவனவாகும். பயிர்களுக்கான பூச்சிக் கொல்லி, நிலத்திற்கான உரம் போன்ற பொருட்கள் நமது மாட்டினங்களில் இருந்தே கிடைக்கிறது. வர்த்தக ரீதியிலான ஜெர்சி போன்ற கலப்பின மாடுகளால் இந்தப் பயன் கிடையாது. அவை போடும் சாணத்திற்கும் சிறுநீருக்கும் இந்தத் தகுதி இல்லை. இதைத்தெரிந்து கொண்ட நாடுகளும் மிகப்பெரிய வர்த்தக நிறுவனங்களும் தங்களது பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்ள தயாரித்து விற்கும் பூச்சிக் கொல்லி மருந்துகள், உரங்கள், உணவுப்பொருட்கள் போன்றவற்றின் விற்ப னைக்கு, தமிழக மண்ணின் மாடுகள் தடையாக இருக்கிறது என்று எண்ணி, நமது நாட்டின் கோடரிக்காம்புகளின் துணையோடு காலம் காலமாக நம்மோடு இருக்கும் மாட்டினங்களை அழிக்கும் வேலைகளைச் செய்து கொண்டே இருக்கின்றனர். அதன் கடைசி அத்தியாயம்தான் ஏறுதழுவலை ஒழிப்பது. ஜல்லிக்கட்டுக்குத் தடை என்பது.

இந்தியா முழுவதும் மாட்டினங்கள் அழிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தில் மட்டும்தான் அவைகளை முழுமையாக அழிக்க முடியவில்லை. காரணம் ஜல்லிக்கட்டு, தமிழர் களின் பாரம்பரியம். காளைகளை குழந்தை களைப் போல் வளர்க்கிறார்கள் தமிழர்கள். இதிலும் சில புல்லுருவிகள் இது மதம் சார்ந்த ஒன்று என்று குறுக்குச் சால் ஓட்டுகின்றனர். கிறித்தவர்கள் ஜல்லிக்கட்டுக்கு எதிரானவர்கள் என்கிறார்கள். அடே அடி முட்டாள்களே இங்கே இருக்கிற கிறித்தவன் தமிழன் என்பதை எத்தனை முறைதான் உங்களுக்குச் சொல்வது. தமிழர்களில் சிலர் மதம் மாறினார்களே தவிர இனம் மாறவில்லை. தமிழன் என்ற இனத்தை மாற்றிக் கொள்ளவும் இயலாது. இந்த அடிப்படை கூட தெரியாமல் மதவெறி யேற்றும் மாக்கள் இனிமேலாவது மாற வேண்டும்.

தமிழர் என்ற ஒரு ஒற்றுமையான அமைப்புக் குப் பின்பு வந்த சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்யம் போன்ற மதங்கள் எங்கே? புத்தம் எங்கே? சைனம் எங்கே? எல்லா வற்றையும் அழித்துவிட்டு தங்கள் சுயலாபத்துக்காக, பாதுகாப்புக்காக இந்து என்ற ஒன்றை ஏற்படுத்தி, சாதிகளையும் ஏற்படுத்தி தமிழர்களை, இந்தி யர்களை ஏமாற்றும் ஆரியர்களின் வஞ்சகத் திற்குள் யாரும் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. தமிழர் என்ற இனம் எப்போதுமே சிறப்பு வாய்ந்தது. இந்த மண்ணோடு ஒன்றியது. செயற்கையானது அல்ல. இயற்கையானது. இயற்கையோடு இயைந்த வாழ்க்கைதான் தமிழருடையது. இந்த சீர்மிகு வாழ்விற்கு, சிறப்புக்குரிய வாழ்விற்கு எதிராக எது வந்தாலும் அதை அடியோடு அழித்தொழிக்கும் வல்லமை தமிழருக்கு உண்டு. அந்த வலிமையோடு ஏறுதழுவுதலுக்கு எதிரான தடைகளைத் தகர்த் தெறியவும் இயற்கை வேளாண்மையை வென்றெடுப் பதும் ஒவ்வொரு தமிழருடைய உணர்வுமிக்க கடமையாகும். இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனும்கூட.

**விசவனூர் வே. தளபதி.**

சிறுகதை

தரா கார்த்திகை

# விடியலை நோக்கி....

மாறன் மண்மீது சாய்ந்து மரத்தின் அருகே மறைத்து அழத் தொடங்கினான். இருள், கொடிய இருள் எழுந்து மண்ணில் ஆர்ப்பரிக்க துவண்டு புரண்டு போனான். அமைதியான அவனது அழுகை ஒலி, அந்தக் கதறல் வலி வானைப் பிளந்து போட்டது. அந்த அழுகை அவனுக்குள் இருந்து எழுந்த வேதனை, அவன் முன்னே நீளும் பரந்தவெளியை, இரவுக் குருவியின் சத்தத்தைப் புனிதப்படுத்திற்று.

அவனது புழுதி படிந்த விரல்கள் கண்ணீரைத் துடைத்தெறிந்திற்று. கண்கள் நீள ஈரம், இதயம் நீள இரக்கம், அதனால்தான் நீண்ட நிலத்தையும் அன்புக்குரிய தன் நிலத்து மக்களையும் சுமந்தபடி சுடுபொறியைச் சுமக்கத் தொடங்கினான். சுமைகளையும் கடும் வலிகளையும் தாங்கத் தொடங்கினான்.

பள்ளத்தில் இருந்து ஓடிச்சென்று மண் மேட்டில் ஏறி நாற்புறமும் பார்த்தான். இரவுக் குருவியைத் தவிர பக்கங்கள் யாவும் மயான அமைதி. மேலே நிமிர்ந்து வானைப் பார்த்தான். வான், நிலவோடு புணரத் தயாராகிவிட்டது. நிலவு மெலிதாய் எழுந்து மேகத் துகில் நீக்கிக் கொள்கிறது. மாறன் வெறுப்பாய் நோக்கினான். வேதனையோடு.

“நிலாவே! சென்றுவிடு சென்றுவிடு“ என்பதாய்ப் பார்த்தான். பார்வையால் சுட்டெரித்தான். சுகமிழந்து போனதாய் மெல்லிய காற்று அவன் முகத்தில் மருவிப் போனது.

“காற்றே வேண்டவே வேண்டாம். இப்போது வேண்டவே வேண்டாம்“ என்பதாய் அவனது உணர்வுகள் மண்மேட்டிலே அப்படியே அமர்ந்த படி இரவுக்குருவியின் சத்தத்திற்கு அப்பால் அவதானித்தான். மெல்லிய பின் நிலவில் “கவலைப் படாதே“ என்பதாய் பனை மரங்கள் தலை அசைத் திற்று. “எப்படிப் பனைமரமே எப்படி துயரம் கொள்ளாமல் இருக்க முடியும்? அழகிய என் நிலம், அடிமையான என் இனம், எவ்வளவு காலம்தான் இன்னும் அடிமையாய் இப்படி“ என்றான்.

துயரம் தொண்டை வரை தகித்து வறண்டு போனது. அண்ணாந்து வானைப் பார்த்தான் நம்பிக்கையோடு மின்னிய நட்சத்திரம் “மாறா!



கவலைப்படாதே! நானும் உன்னைப் போலதான் விழித்திருக்கிறேன். என் நாடு, என் மக்கள், எனது குடில், பனை நீண்ட பனை நிலம், அழகிய வயல், ஆற்றுப் படுகை எல்லாம் எல்லாமே எங்களதே கவலைப்படாதே. கவலை கொள்ளாதே. காத்திர மாக இரு. காத்திரு! மாறா காத்திரு! பொறுமை, நிதானம், சகிப்புத் தன்மை எல்லாம் போர் வீரனுக்கு அழகு பொருதலும் கூட இல்லையா மாறா?

ஆம் நட்சத்திரமே உண்மைதான். எல்லாமே எங்களது இந்த மேட்டு நிலம் மெல்லச் சரியும் மணல், வயல் வயலோடு இணையும் ஆற்றுப்படுகை எல்லேமே எல்லாமே எங்களதே. ஆனால் எதிரி அவன் வருகை கொடுமை மிக்க அவன் பாதணியின் ஒலி, என் தேசத்தை நிலைய குலைய வைக்கும். அந்தக் கொடிய நிலை என் கண்முன்னே நிகழும் கோரம் எல்லாம் எல்லாமே என்னை வாட்டுகிறது. வதைத்துப் போடுகிறது.

நட்சத்திரமே, நட்சத்திரமே எப்படி எப்படி அவளது அழகிய முகத்தைக் கடந்து, அவளது அழகிய நீண்ட இமைகளைக் கொண்ட விழி களைக் கடந்து, நீண்ட மண் தெருவில் அவன் வருவான் என்று பார்த்திருக்கும் அவளது காத்திருப்பைக் கடந்து, அவளது நீண்ட, சுருண்ட கேசம் கடந்து, அவளது இல்லம் நிறைந்த தென்னை, முருங்கை, மா எல்லாம் கடந்து எப்படி எப்படி என்னால் உரைக்க முடியும் நட்சத்திரமே! எப்படி முடியும்.

சென்ற மாதம் விடுமுறையில் சென்றிருந்தோம். அந்த நீண்ட மண்தெரு கடந்து அவளது இல்லம் அடைய முந்தி அவள் ஓடி வந்தாள். ஆனந்தமான அவளது பார்வை, ஓடி வந்த அவளது மெல்லிய களைப்பு, மலர்ந்த முகம், காதலுக்குத் தயாரான காத்திரமான பார்வை, வாருங்கள் என்று வசீகரிக்கும் வார்த்தை, எளிமை நிறைந்த ஊர், கள்ளம், கபடம் இல்லாத உறவுகள்.

நாங்கள் திண்ணையில் உட்கார்ந்ததும் ஓடிச் சென்றாள். பசுமையான தேசிமரம் தென்னை ஊடே தெரிந்தது. நிறைந்து போன காய்கள், ஆங்காங்கே மஞ்சள் பழங்கள். பழங்கள் பறித்தபடி வந்தாள். களைப்பில் மிகுந்த எங்களுக்கு அந்த மணம், அந்தச் சுவை, தாகம், களைப்பு எல்லாமே ஒரு நொடி, ஒரு நொடிப் பொழுது களைப்பே தீர்ந்து போனது. தேசிக்காய் நீர், அளவான சர்க்கரை எல்லாமே இரவு நேரம் போருக்கப்பால் ஈட்டப்படும் வெற்றிக் களிப்புப் போல் சுகமாக இருந்தது.

அப்பால் அவளது தாய் கசங்கிப் போன நூல்ச்சேலை, களைத்துப்போன முகம், கொடூரத்தில கொடுமை மிக்க சிங்கள பாதணியால் கொலை செய்யப்பட்ட கணவனை இழந்த பரிதவிப்பு, காய்ந்து வறண்டு போன நீண்ட கைகள், உரொட்டியை உதிர்ப்போடு விறகு, நெருப்பு வெம்மியாரம், வேகும் உரொட்டி அந்த அற்புதமான மணம் எல்லாமே அந்தக் கிராமத்தைப் போல எவ்வளவு சுகம்.

மீன், மீன்குழம்பில் எழுந்து வரும் அந்த வளம், எல்லாம் ஆவி எழுந்து பரவ உபசரித்தாள். தாய் ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுக்க அவனுக்கு பக்கத்தே அமர்ந்தபடி பரிமாறினாள். பரிமாறப் பட்டது உரொட்டி, மீன் குழம்பு, அந்த வாசம் மட்டுமல்ல அன்பு, அரவணைப்பு, ஏக்கம், பிரிவு, நீண்ட நாட்களுக்கப்பால் காணும் தவிப்பு எல்லாம் எல்லாமே தான்.

உரொட்டி, உரொட்டிக்கல் நெருப்பு, உணவு, உணவு பரிமாறும் பக்குவம், வட்டில், திண்ணை, வாங்குகின்ற முறை, பின்பு வட்டிலை எங்களிடம் வேண்டி மிஞ்சிப் போன, அவன் விட்டதான சின்னதான உரொட்டித்துண்டு அப்படியே எடுத்த வாயில் போட்டபடி ஒரு மெல்லி புன்னகையோடு அவனை நோக்கிய பார்வை. அதன் அர்த்தம் அப்பால் எழும் நேசம் எல்லாமே நெஞ்சை எரித்துப் போட்டது.

நட்சத்திரமே நம்பிக்கையான அவளது பார்வை நெஞ்சை நெகிழ வைக்கும் உபசரிப்பு, உறவுகள் தொலைந்து போன அந்த நிலை, தாய், தாயின் ஏலாமை எல்லாம் எனக்குள் கனக்கிறது. கனத்து வலிக்கிறது நட்சத்திரமே.

எப்போதும் அவளைப் பற்றி அவளது குறும்புகள் பற்றி அல்லது அவளது தாய் பற்றி பேசி யிருக்க மாட்டான். அவளுக்காக ஒரு பொழுதைக் கூட ஒதுக்கியிருக்க மாட்டான். தனிமையில் பேசியிருக்க மாட்டான். தனிமை, தனிமையில் மௌனம் அப்பால் ஏதுமே இல்லை. அவளுக்காக ஒரு பொருள் வேண்டியிருக்க மாட்டான். ஆசையாக ஒரு வார்த்தை பேசி இருக்க மாட்டான்.

“நட்சத்திரமே நட்சத்திரமே“ என்றபடி மறுபடியும் அந்தப் பள்ளத்தை நோக்கி ஓடிச்

சென்று அவனது தலையைத் தூக்கி மடியில் வைத்தபடி,

"இதோ பார் நட்சத்திரமே இதோ பார் அவனது முகத்தைப் பார். இனிக் கண் விழிக்க மாட்டான். இனி எழுந்திருக்கவும் மாட்டான். அவளைப் பற்றி, அவளது தாய் பற்றி, அவளது குறும்புகள் பற்றி எப்போதும் எப்போதும் அவன் பேசியது இல்லை. அவன் பேசுவதெல்லாம் தன் மக்கள், தன் நிலம், அவர்களது அவலம், அவர்களது இடப்பெயர்வு, வழியில் நிகழும் அவர்களது மரணம், எதிரி, அவனது சுடுபொறி, இரக்கமில்லாமல் அவன் எங்கள் மீது விதிக்கும் மரணம், எங்கள் தேசத்து மலர்களை கொடிய சப்பாத்துக் கால்களால் நசித்து கண்கூசிக் கலங்கிப் போகும்படி கிழித்து கண் முன்னே ஏன் ஏனோ போடுகிறான். ஒவ்வொரு சிங்கள தேசத்தவரும் சிங்களச் சிப்பாயும் என்னை, என் தேசத்தை, என் மக்களை ஏனோ புரியவில்லை" என்று மட்டும் என்னிடம் அடிக்கடி கூறுவான்.

நட்சத்திரமே! கொஞ்ச நேரம் ஒதுக்கி தன் கேசத்தை வருடமாட்டான். தனக்கென்று ஏதும் கேட்க மாட்டான். ஆனால் பேனா, ஒரு நீண்ட வெள்ளைத்தாள் எழும் அமைதி அப்பால் நீண்ட வானம், பறவைக் கூட்டம், பனித்துளி, பிரகாசித்து நிமிரும் விடியல் எல்லாமே எல்லாமே அவனுக்கு ரொம்பப் பிடிக்கும்.

மேலும் ஒன்று ஒற்றையாய்த் தெரியும். மரம் சாய்ந்த கிளை, சருகு, அதன் சத்தம் அங்கே அசையும் அமைதி எல்லாமே எல்லாமே தான்.

நட்சத்திரமே இனிமேல் எழுந்திருக்க மாட்டான். என்னை அழைக்க மாட்டான். "நான் தலை வைத்து என் மண்மீது உறங்கும் போது என் அன்னையின் மடியில் தைரியமாக உறங்குகின்ற உணர்வு எனக்கு" என்று அடிக்கடி கூறுவான். அவன் சில சமயம் தூங்கச் செல்லும் முன்பு அதையே கூறுவான்.

"நட்சத்திரமே என் அன்பை நட்சத்திரமே இதோ பார் அவன் அவளுக்காக எழுதிய சிறிய மடல் நட்சத்திரமே" என்று ஓவென்று அழுதான்.

அவளது காத்திருப்புக்கப்பால் அவனைப்பற்றி அவன் மரணம் பற்றி எப்படி உரைப்பேன் நட்சத்திரமே. எப்படி என்னால் முடியும் நட்சத் திரமே என்றபடி அவனது சுடுபொறியை எடுத்து தோளில் வைத்து சரிசெய்து கொண்டு அவனைத் தூக்கி தோளில் தாங்கினான்.

நட்சத்திரமே! நானும் உன்னைப்போல் தான் என் நாடு, என் மக்களுக்காக விழித்திருக்கிறேன். என்றபடி நடக்கத் தொடங்கினான். அந்தப் பள்ளத்தில் இருந்து ஏறி மண்மேட்டில் நிமிர்ந்து பார்த்தான். விடியல் எழுந்து வெளிச்சம் பரவத் தொடங்கிற்று.

●

## மஞ்சளின் மருத்துவம்

நமது பாரம்பரியமான உணவுகளிலும், அழகுசாதனப் பொருட்களிலும் மருத்துவக்குணம் வாய்ந்த பல பொருட்கள் சேர்க்கப்படுகின்றன. அவற்றின் சிறப்பை, மேலைநாட்டினர் அவ்வப்போது செய்யும் ஆய்வுகள் நிரூபித்து வருகின்றன.புதிய கண்டுபிடிப்பாக, மஞ்சள் கிழங்கானது 'ஆஸ்டியோபோரசிஸை' (எலும்புச் சிதைவு) தடுக்கும் என்று அமெரிக்க ஆய்வாளர் ஒருவர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இஞ்சி வகையைச் சேர்ந்த தாவரமான மஞ்சள், இந்தியச் சமையலில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நமது ஆயுர்வேத மருத்துவத்தில் பல நூற்றாண்டு காலமாக இது பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. பல்வேறு வகையான உடல்நலக் குறைவுகள், வயிற்று வலி, மூட்டு வீக்கம் போன்றவற்றுக்கு மஞ்சள் கைகண்ட மருந்தாகக் கருதப்படுகிறது.

வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்யப்படும் மஞ்சளானது உணவு வகைகளில் ஒரு நறுமணப் பொருளாக அதிகளவில் சேர்க்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் தாராளமாகக் கிடைக்கிறது.உடலியல் செயல்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கும் 'எண்டோக்ரைன் சுரப்பி' நிபுணரான ஜேனட், மஞ்சள் குறித்துப் பல ஆண்டுகள் ஆய்வு செய்திருக்கிறார்.

ஆய்வுக்கு என்றே பதப்படுத்தப்பட்ட மஞ்சளை கவனமாக, நுணுக்கமாக ஆராய்ந்து முடிவுக்கு வந்திருக்கிறார். அப்போது, எலும்புகளின் சிதைவைத் தடுப்பதன் மூலம், மூட்டுகளில் ஏற்படும் பாதிப்பை மஞ்சள் தடுக்கிறது என்று ஜேனட் கண்டறிந்தார். 'மெனோபாஸ்' ஆன பெண்களுக்கும் எலும்புச் சிதைவையும், எலும்பு இழப்பையும் மஞ்சள் கட்டுப்படுத்துகிறது.

## சீவக சிந்தாமணி அறிமுகம்

# பதுமையார் கலம்பகம்

### கதைச்சுருக்கம்



இவ்வாறு சுதஞ்சணனோடிருந்த சீவகன் நாடுகள் பலவற்றினுஞ் சென்று ஆங்காங்குள்ள காட்சி களைக் காண விரும்பினான். இவ்விருப்பத்தைச் சுதஞ்சணனுக்குக் கூறினன். அது கேட்ட சுதஞ்சணன் சீவகனுக்கு நெறியின் இயல்பு கூறி மேலும் காமனுங் காமுறப்படும் இன்குரல் தருவதும், பாம்பு முதலிய வற்றால் உண்டாகுந் தீங்குகளையும் நோய்களையும் தீர்ப்பதும் கருதிய உடம்பினைத் தருவதுமாகிய மூன்று மறைமொழிகளைச் செவியறி வறுத்தி னன். பின்னர்ச் சீவகனை இனிதினேந்திக் கொண்டு இழிந்து, நிலவுலகில் விடுத்துச் சென்றான்.

சீவகன் சுதஞ்சணன் கூறிய நெறி பற்றிச் சென்றனன். வழியில் கொலைத் தொழிலை மேற்கொண்டுழன்ற வேட னொருவனைக் கண்டு அவனுக்கு உறுதி மொழிகூறி நன்னெறிப்படுத்தினன். அப்பால் செல்லுங்கால் காட்டுத் தீயால் வளைப் புண்ட யானைத்திரளைக் காப்பாற்றினன். பின்னர் அரண பாதம் என்னும் மலையை எய்தி ஆண்டு அருகக்கடவுளை வணங்கினன். சாரணர் களைக் கண்டு வணங்கினன். பின்னர் பல்லவ நாட்டிலுள்ள சந்திராபம் என்னும் நகரை அடைந்தனன்.

அந்த நகரத்தரசனாகிய தனபதி யோடும் அவன் மகனான உலோக பால னோடும் கேண்மை கொண்டனன். அவ்வரசன் மகளாகிய பதுமை என் பாளைப் பாம்பு தீண்டியதாக, அவளுற்ற விட நோய் தீர்த்து அவளை மணந்தனன். அவளோடு இரண்டு திங்கள் இன்புற்று

அந்நகரத்தே வதிந்தனன். பின்னரும் நாடு காணும் வேட்கை மிகுதலாலே நள்ளிரவிற் பதுமையைப் பிரிந்து வேற்றுருக் கொண்டு அந்நகரத்தினின்றும் புறப்பட்டுச் சென்றனன்.

சீவகன் பிரிவால் பதுமை பெரிதும் வருந்தினள். தன் தோழியருள் ஒருத்தி தேற்ற ஒருவாறு தேறியிருந்தாள். தனபதி மன்னன் தன் மகள் துயரம் பொறானாய்ச் சீவகனைத் தேடிக் கொணர்வதற்குச் சிலரை ஏவினான். அவர்கள் சீவகனை யாண்டும் தேடி ஓரிடத்தே கண்டு "நின்போன்ற இளமையும் வடிவுமுடையான் ஓர் ஏந்தலை நீ யாண்டேனும் கண்ட துண்டோ? நீயிர் தேடா நின்ற அக்காதலனை ஒன்பதாந் திங்களிலே காண்பீர்!" இவ்வுண்மையை நும் மன்னனுக்குக் கூறுமின்!" என்று கூறிவிடுத் தனன். அவரும் சென்று அரசனுக்கு அந்நிகழ்ச்சி யினை அறிவுறுத்தினர். சீவகன் பின்னர் அவ்விடத் தினின்றும் புறப்பட்டு ஒரு திசையே சென்றான்.

**கேமசரியார் இலம்பகம்**

சுதஞ்சணன் கூறிய நெறி பற்றிச்சென்ற சீவகன் சித்திரக் கூடம் என்னும் சிறந்ததொரு தவப் பள்ளியை எய்தினன். ஆண்டுள்ள தாபதர்களோடு அளவளாவி அவர்க்கு அறவுரை பல கூறித் திருத்தினன். அப்பள்ளியினின்றும் புறப்பட்டுத் தக்க நாட்டிற்கே புகுந்தனன். அந்நாட்டின் தலைநகராகிய கேமமாபுரத்தை எய்தினன்.

அந்நகரத்தில வாழும் சுபத்திரன் என்னும் வணிகனுக்குக் கேமசரி என்னும் ஓர் அழகிய மகளி ருந்தனள். அம்மகள் பிறந்தபொழுது சுபத்திரன் கணிகளை அழைத்து "இவட்குக் கணவன் யாவன்?" என வினவினன். அக் கணிகள், "நின் மகள் எவனைக் கண்டு நாணுகின்றனளோ! அவ்வாடவனே இவட்குக் கணவன் ஆகுவன். இவட்குப் பிற ஆடவரைக் காணுங்கால் நாணந் தோன்ற மாட்டாது", என உணர்த்தியிருந்தனர். இக்காரணத் தால் அவ்வணிகன் நாடொறுந் தன் கடைக்கு வரும் அழகிய இளைஞரைத் தன் மனைக்கழைத்துச் சென்று விருந்தூட்டுவன்: அத்தகையயோருள் ஒருவரையும் கேமசரி கண்டு நாணமுற்றிலள். மணப்பருவம் கழிந்து விடுமோ என்று சுபத்திரன் வருந்திருந்தான்.

சீவகன் ஊழ்வலியுண்மையால் சுபத்திரன் கடைக்குச் சென்றனன். இவனது எழிலும் இளமையும் கண்ட சுபத்திரன் வியப்புற்றனன். இவனையும் சுபத்திரன் தன்னில்லத்திற்கழைத்துச் சென்று விருந்தூட்டினன். சீவகனைக் கண்ட கேமசரி பெரிதும் நாணமுற்றனள். அவன்பாற் காதன்மிக்கு வருந்தா நின்றனள். அவ்வழி சுபத்திரன் சீவகனுக்குக் கமேசரியை மணம் செய்வித்தனன். அம்மங்கை நல்லாளுடன் சீவ நம்பி இரண்டு திங்கள் இன்புற்றிருந்தனன்.

பின்னர்க் கேமசரியறியாதபடி, அவ்விடத் தினின்றும் புறப்பட்டுச் சென்றான். வழியில் ஒருவனுக்கு அறவுரை பகர்ந்து தன் அணிகலன் களை அவனுக்கு வழங்கினன். வழங்கி அவ்விடத் திலிருந்து புறப்பட்டுச் சென்றனன். அவள் தாயாகிய நிப்புதி அவளை அரிதிலேற்ற ஒருவாறு தேறியி ருந்தனள்.

முற்றும். ●



## முற்றம்

முற்றங்களைத் தொலைத்து விட்டு
மேல்மாடிக் கட்டிடத்தின் வாசலில்
வெற்றிடத்தில் நின்று நாம்
வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம்
ஒற்றைத் துண்டு நிலம்கூட இல்லை...
எமதென்று சொந்தம் கொண்டாட...
இந்நிலையில்
முற்றம் எங்கே கிடைக்கும்?
மனதில் ஒரு தீராத ஏக்கம்
போகட்டும் விட்டு விடு
வாழ்வில் நிலையானது தான் எது?
ஆக வேண்டியதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்
ஆழ் மனது சொல்கிறது
தாகத்தைத் தீர்க்க உதவும் தண்ணீர் போல
உன்மன
வேகத்தை, ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்ள
இதோ... உனக்காக , இந்த முற்றத்தின் வாசல்
காத்திருக்கிறது மகனே!
நம்பிக்கையோடு செயல்படு
நாளை நிச்சயம் விடிவுண்டு!

ஆக்கம்
**இணுவை சுசீலா**

# கொலை பாதகம்?

**வேர்மகள்**

உயிர்ச்சேதம், பொருட்சேதம் என்று பல்வேறு வகைப்பட்ட சேதங்களை சென்னை சந்தித் துள்ளது. காரணம் மழை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் சென்னை யைப் பொறுத்த வரை மழையால் ஏற்பட்ட சேதத்தைவிட ஒருசில மனிதர்களால் ஏற்படுத் தப்பட்ட சேதமே அதிகம்.

முதலாவது ஆற்றுவழிப்பாதையில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கொடுத்த அன்றைய இன்றைய அரசுகள். ஊழல் செய்த அதிகாரிகள், அதிகாரத்தைப் பயன்படுத்தி அடாவடி செய்த அரசியல்வாதிகள், பெரும்பணக்காரர்கள் இவர் களெல்லாம் முழுமுதற்காரணம். பள்ளம் கண்ட இடத்தில் பாயும் தண்ணீர், கட்டடப்பட்ட கட்டிடங்களில் மோதி மக்கள் வசிக்கும் பகுதிக்குள் புகுந்து பலத்த சேதத்தை விளைவித்து விட்டது.

இவைகள் தவிர, இன்றைய அரசின் தேர்தல் தொலைநோக்கும் அலட்சியமும் தான் காரணம் என்று பலர் பேசுகின்றனர். இந்த ஆண்டு உத்தேசமாக மே மாதத்தில் நடக்க இருக்கும் தேர்தலைக் கருத்தில் கொண்டு, அந்த மாதத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு வந்து மக்களிடம் கெட்ட பெயர் ஏற்பட்டு ஆட்சி கைமாறிப் போய்விடும் ஆகவே, 80 விழுக்காடு நீர் அணைகளில் வைத்திருக்க வேண்டும் என்ற ஜெயலலிதாவின் ஆணையை அதிகாரிகள் நிறைவேற்றியதில் இருந்து தொடங்குகிறது வெள்ள சேதம் என்கிறார்கள் பொதுமக்களில் சிலர். அணை யைத் திறப்பதும் அணையில் இருந்து எந்த அளவிற்கு நீர் வெளியேற்றப்பட வேண்டும் என்பதையும்



முதல்வர்தான் தீர்மானிக்க வேண்டும் என்பதாலும் அணைக்கு நீர்வரத்து அதிகமாகிவிட்டது, திறந்துவிடும் நீரின் அளவை அதிக்கப்படுத்த வேண்டும் என்பதை அதிகாரிகள் மேலதிகாரிகளுக்கும் துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர், துறை அமைச்சர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் இச்சேதம் நிகழ்ந்திருக்கிறது என்கிறார்கள் சிலர்.

முதலமைச்சரிடம் இந்த அவசரச் செய்தியை யார் போய்ச் சொல்வது என்பதில் பல நிமிடங்கள் கடத்தப்பட்டதாகவும் முதலமைச்சர் உறங்கிக் கொண்டிருப்பார். அவரை இந்த இரவில் எழுப்பலாமா? கூடாதா? என்ற பட்டிமன்றத்தால் பல நிமிடங்கள் கடத்தப் பட்டதாகவும் கூறுகிறார்கள். செம்பரம்பாக்கத் திற்கு நீர் மிகப்பெரிய அளவில் வந்து கொண்டிருந்த செய்தி தொடர்ந்து வரவே, வேறு வழியின்றி முதலமைச்சரிடம் சொல்லி அணை திறக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட அசாதாரண சூழலில் முதல்வர் எந்நேரமும் தொடர்பு கொள்ளும் நிலையில் இருந்திருக்க வேண்டும். அல்லது அணை திறக்கும் அதிகாரத்தை அமைச்சரிடமோ, தலைமைச் செயலாளர், துறைச் செயலாளரிடமோ தந்திருந்தால் இந்த நிலைமை சென்னைக்கு ஏற்பட்டிருக்காது. எல்லாம் நான் தான் செய்வேன் என்ற அதிகார மோகம் சரியானதல்ல. அது குடிமக்களை நடுத் தெருவுக்கு கொண்டு வந்துவிடும் என்கிறார்கள் சிலர். அதுதான் இவ்வளவு பெரிய அழிவுக்கு தென் சென்னை மக்களைக் கொண்டு வந்திருக்கிறது என்று பேசப்படுகிறது.

மேட்டுக்குடி மக்களும் இராணுவத்தினரும் வசிக்கிற ஈக்காடுத்தாங்கல் டிபன்ஸ் காலனியில் அனைத்து வீடுகளின் தரைத்தளம் வெள்ளத்தால் ஆக்கிரமிக்கப்பட்டதற்குக் காரணம் திடீரென்று பல்லாயிரம் கனஅடி தண்ணீரைத் திறந்து விட்டதுதான் காரணம். இரவில் திறந்து விடப் பட்டதும், திறந்துவிடும் நீரின் அளவை சிறிது சிறிதாக உயர்த்தாமல் திடுதிப்பென்று அதிக அளவில் திறந்துவிட்டதும் அழிவிற்கு காரணம். இந்த அளவிற்கு தண்ணீர் திறக்கப் படவிருக்கிறது என்பதை பொது மக்களுக்கு அறிவிக்காததும் உயிர்ச் சேதத்திற்கு முக்கியக் காரணம் என்றும் கூறப்படுகிறது. சென்னை நகரத்தில் ஏற்பட்ட பெரும் சேதத்திற்கு ஜெயலலிதா அரசின் நிர்வாகத் திறமையின் மையே காரணம் என்று எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த அரசும் இனி வரும் அரசுகளும் இந்த மழைவெள்ளத்தை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு நீர்வழிப்பாதையில் உள்ள தடைகளை எல்லாம் நீக்கி நகரத்தின் மக்களைப் பாதுகாத்திட வேண்டும் என்பதுதான் நடுநிலையாளர்களின் கருத்தாக இருக்கிறது. ●



## ஜல்லி கட்டு வரலாறு

முல்லை நிலத்தில் வாழ்ந்த தமிழர்கள், தங்களது செல்வமான ஆடுமாடுகளைப் பாதுகாத்துவந்தனர். காடுகளில் மாடுகள் மேயும் போது அவற்றைக் காவல் காக்கும் இளைஞர்கள் காலப்போக்கில் மாடுகளைத் தம் கைவலியால் அடக்குவதை விளையாட்டாகச் செய்து வந்தனர்.

இவ்விளையாட்டில் வெல்லும் இளைஞர்களுக்கு மக்களிடையே பாராட்டும் புகழும் குவியத் தொடங்கியது. இதன்விளைவாக, இவ்விளையாட்டு காலப்போக்கில் மரபாக மாறியது. இதுவே, மஞ்சுவிரட்டு என்ற பெயரில் கொண்டாடப் பெறுகிறது. இவ்விழாவினில், இளைஞர் காயம் அடைகிறார்கள் என்று கூறித் தடை செய்வது வேறு. இவ்விழாவினை இழித்துரைக்க முன்வருவது வேறு.

இவ்விழா தமிழர்களுடைய திறத்தையும் மறத்தையும் காட்டும் விழாவாகவே இருந்தது என்பது வரலாறு கூறும் உண்மை. கலித்தொகை முல்லைக்கலி முழுவதும் இம்மஞ்சுவிரட்டு பற்றியும் இவ்விழாவில் மக்கள் கூட்டம் கூட்டமாகப் பங்குகொள்வது பற்றியும் பெண்களை மணந்துகொள்ள ஆடவர் இவ்விழாவில் காளைகளை அடக்கிக் காட்டுவதும் தமிழ் மரபாக இருந்திருக்கிறது.

*அந்த பஸ் நின்றது!*

எனினும் பந்தயத்தில் ஓடிவந்தவருக்கு மூச்சு இரைப்பது போல, உறுமலும் குலுங்கலும் அடங்காமல், இன்னமும் ஓடவேண்டுமே... என்கிற ஆயாசத்துடன் உறுமிக்கொண்டே நின்றது?!

மண் சாலையின் நெளிவுகள், வளைவுகள், குறுகல்கள், பள்ளமேடுகள் என்று எல்லா இடைஞ்சல்களையும் கவிழ்ந்தோ... மக்கர் பண்ணியோ... கதிகலங்க வைக்காமல், பாதுகாப்பா கவும் பத்திரமாகவும் தங்களை அள்ளிக் கொண்டு வந்து சேர்த்ததுக்காவும்... இனிமேலும், தினமும் போய்வர வேண்டியிருக்கிறதே. நம்ம பொழப்பும்... தலை எழுத்தும்... என்கிற கவலையை தமது நெஞ்சங்களில் சுமந்து கொண்டே... உலுக்கி விடப்பட்ட புளியம்பழங்களாக உதிர்ந்தனர் அவர்கள் எல்லோரும்.

அதே பயங்கர உறுமலுடன் மீண்டும் புறப் பட்டது அந்த பஸ். அந்தப் பகுதியில் அதுதான் கடைசி பஸ்... என்கிற அவசர கதியில், பொன்ன மராவதியிலிருந்து ஊருக்குக் கடைசி உலகம்பட்டி... வி. புதூர்... வழியாக துவரங்குறிச்சி சந்திப்பில், சென்னை, மதுரை தேசிய நெடுஞ்சாலை பேருந்தைப் பிடிக்கிறவர்களுக்காக!

பஸ் நின்ற அந்த நிறுத்தம்தான் 'ஞானியார் மடம்' என்பது. ஞானியார் மடம்?!

எத்தனையோ மாமாங்கங்களுக்கு முன்னால் ஒரு மனிதர் சோத்துக்காவடி, இடுப்புக் காவித் துணியுடன் மணி ஓசையுடன் வழிப்போக்கராய், சன்னியாசியாய் ஒத்தையடிப்பாதைகளாகவே வளைந்தும் நெளிந்தும் குழந்தையை அணைத்துச் சேர்த்துப் பிடித்துக் கொள்கிற பாசத்துடன், கிராமப்பகுதிகளையெல்லாம் இணைத்துக் கொண்டு கிடந்த அந்த நான்கு வழிச் சந்திப்பான... அதே இடத்தில்... குளிர்ந்த நீர்ச்சுனையையும் அதைச் சுற்றிப் புதராக மண்டிக் கிடந்த செடி கொடுகளும் மரச் சோலைகளும்... அதன் மத்தியில் நட்டுவைத்தது போலவே... முளைத்த வளர்ந்திருந்த குண்டுப் பாறையில்... அம்புட்டு தொலைவையும் நடந்தே வந்த களைப்பையும்... ஆயாசத்தையும் சற்றே... போக்கிக் கொண்டு, தான் சேர வேண்டிய இலக்கை நோக்கி நடக்கலாம் என்கிற நப்பாசையில் குந்திய அந்தக் கிழவனுக்கு... 'தான் சேர வேண்டிய இறுதி இலக்கும் அதுதான்' என்று புரியவில்லை அப்போது.



# தற்காப்பு

கி.சி. ஆனந்தவேலன் (ஜெயமதி)

பனிக்கட்டியாய் சில்லிட்டுக் கிடந்த அந்த ஓடையின் தண்ணீரை உள்ளங்கையில் அள்ளிய நொடியில் தனது மேனியெங்கும் குளிர்ந்து... உள்ளத்தைச் சிலிர்த்து... உள்ளே உறங்கிய அந்தர் ஆத்மாவையும் உலுக்கிய கணத்தில் தன்னை உணர்ந்தவர்தானாம்?!

பித்தம் தெளிந்த சித்தனாகி அந்தக்குத்துக் கல்லிலேயே வக்கிராசனத்தில குந்தியபடியே ஜீவசமாதியாகிவிட்டாராம்... அங்கு ஆடுமாடுகள் மேய்த்த சிறுவர்களுக்கு அவல் பொரி கடலை பிரசாதம் கொடுத்து?! பிற்காலத்தில் அந்தச் சுற்று வட்டார கிராமத்து மக்களால் எடுக்கப்பட்ட முயற்சிகளிலும் பொருள் செலவிலும் ஒரு குட்டி சமாதி, முருகன் கோயில், சரவணப்பொய்கை, ஒரு அன்னதான மடம்... இத்யாதிகள் எல்லாம் உருவாகினவாம்.

பிறகு ஆண்டு தவறாமல் வருகிற தைப்பூச நாளில் அன்னதானம், தர்மங்களும் வழங்கி விழா கொண்டாடுவார்களாம். அந்த சுற்று வட்டார மக்கள் அவ்வப்போது அந்த பஸ் நிறுத்தத்தில் வந்து இறங்குகிற புதிய விருந்தினர்களுக்கு சொல்லிக் கொள்கிற விளம்பரச் செய்திகள்தாம்.

இப்பெல்லாம் ஆடு, கோழி, நரபலி, பேய்பிசாசு என்கிற ரெத்தக் காவுகளை வாங்காமலே அந்த ஞானியார் மடம் ராப்பகலாக அந்தப்பகுதி ஜனங்களுக்கு முக்கியமான பஸ் நிறுத்தமாகி பயன்பட்டு வருகிறது. இருள் படர்ந்த வெளிச்சத்தில் பஸ்ஸை விட்டு இறங்கியவர்கள்... நாளெக்கி மீண்டு சந்திக்கும் உறுதியை கூறிக்கொண்டே ஒத்தையடிப் பாதைகளில் பிரிந்தார்கள். பிரியா விடை பெற்றவர்களாகத் தம் பிள்ளைகளையும் குடும்பங் களையும் மனதில் அசை போட்டுக் கொண்டே?!

மட்டாங்காடு, வெள்ளையங்கடிப்பட்டி, படைமிஞ்சி, சுள்ளாம்பட்டி, புதுவாடி, பண்ணப்பட்டி, ஊருக்குக் கடைசி உலகம்பட்டி, ஆரணிப்பட்டி.... என்று?!

ஆனால், அந்த ஒருவன்? காட்டுராஜா!? அவன் மட்டும், போவதற்கு மறுத்தமனம். மக்கர் பண்ணி, தன்பழைய எண்ணத்தை, ஏமாந்திருந்த அநியாய நினைவை, திடுமென்று பற்றிக் கொண்டவனாய் சுற்றும் முற்றும் தேடுவது போல மௌனமாகவும் சந்தடி செய்யாமலும் மெல்ல குரல் கொடுத்தான். "சின்னப்பொண்ணு, சின்னு, சின்னு என்று!

அவன் கூப்பாட்டுக்கு பதில் வரவில்லை. பளீர் என்கிற ஏமாற்றத்தின் கனல்தான் சுரீர் என்று சுட்டது அவன் இதயத்தில். சினத்தின் சீற்றம், அவசரம், ஆயாசம், திடீர் ஏக்கம், ஏமாற்றம், எல்லாம் கௌவி கூட்டமாய்க் கொட்டியது அவன் மனதை. ஏமாற்றமா? எனக்கா? நானா ஏமாறுபவன்? ஏமாறமாட்டேன் அவளிடம். தப்பிக்கவும் அவளை விடமாட்டேன். இம்கூம், அவளெ, அவளெ என்கிற ஆவேசமும் அழுத்தமும் அவனுக்குள் மூண்டு பெட்ரோல் விட்ட பெருந்தீயாய் பார்வையில் எரிந்தது.

புதுவாடி கிராமத்து ஒத்தையடிப்பாதையில், தொங்கு ஓட்டத்தில் ஓடியது அவன் காமக்கண் களைத் தாக்கியதுதான் தாமதம். பாய்ச்சல், ஒரே பாய்ச்சலில் பாய்ந்தவன், வழியை மறித்து, அவள் கையைப் பிடித்து வெட்டி இழுத்து, நிறுத்தி, "ஏமாத்திட்டு ஓடுறியா? இன்னெக்கி ஒன்னெய..." என்று தன் திட்டத்தை உறுதிப்படுத்திக் கொண்ட வனாய், "சொல்லாம பறிஞ்சு ஓடுறெ? ம்? அவ்வளவு நெஞ்சு துணிச்சலா ஒனக்கு? என்று அதட்டி கொக்கரித்தான்.

துணுக்கென்ற நடுக்கமும் பலமும் வந்தாலும் அடிமையாகிவிடாதவளாகி, சுதாரித்து, அண்ணெ தேடிவாரதுக்குள்ள போகணுமில்லெயா? அதனாலெதான் ஓடுறென்" என்று வாய் பதறினாலும் கால்களின் தொங்கு ஓட்டமும் தொடர்ந்தது.

"ஒங்கண்ணெ வாரதுக்கு இன்னம் நேரம் இருக்குது, அதுக்குள்ளெ நம்ம ரெண்டு பேரும் ரெண்டு வார்த்தை ஆசெயா பேசிட்டு போகலாம் வா! என்று தனது தீய திட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டே, லபக்கென்று தூக்காத குறையாக இழுத்துச் செல்ல, அவளும் அவனது காமாக்கினிப் பிடியிலிருந்து திமிர திராணி இல்லாது போனாலும், அவள் உள்மனம் கீழ்க்கண்டவாறு திட்டமிட்டுக் கொண்டிருந்தது.

"இம்புட்டு நாளா... இவன் நடந்துவந்த வெதமும் இப்ப இவன் நடக்கிற வெதமும் துடிக்கிற துடிப்பும் சொல்லுகிற சொல்லும் பேச்சும் மோசமாவுல இருக்குது. ச்சீசீ சரியில்லையே, இவன் யாரோ? நம்ம யாரோ? நம்ம குடும்பம் இருக்கிற நெலயில அம்மா ஒளெச்சு ஓடாத் தேயிறாங்க, அண்ணெனோ அவன் படிப்பெ விட்டுட்டு என்னெயெப் படிக்க வைக்கிறான். ஏதாச்சும் எசகுபெசகா நடந்திருச் சுன்னா??? ஆத்தி, நான் தொலஞ்சென்.. அப்பொறமா.. நம்ம சாதி சனத்துலெ தலெதூக்க முடியுமா? ஹூஹூம் புதுவாடிப் பொட்டச்சிங்க,

கண்ணாலெ கரிச்சுக்கொட்டி சொல்லாலே சுட்டுப் பொசுக்கி பொதச்சிறுவாளுங்க. ஆமா“ என்கிற அச்ச உணர்வுகளில் அதிர்ந்து கொண்டிருந்தாள்.

கோடை வெய்யிலில் கட்டாந்தரையாய் காய்ந்து கிடந்த சரவணப்பொய்கைக்குள் கூட்டிச் சென்ற அவளை பாசாங்காய் இழுத்து ஆவேச இழுப்பில் தடுமாறி நிலை குலைந்தவளாய் விழுந்துவிட்டாள். தனக்கு வசமாக விழுந்து மாட்டிக் கொண்டாள் என்கிற கணக்கிலும் அடித்தது அதிர்ஷ்டம் என்கிற பேராசையிலும் தன்னுடைய கபடச் செயலை, ஆசையை, இச்சையை தணித்துக் கொள்கிற யுத்தியில் அவள்மீது கவிழ்ந்தான். திமிரிக்கொள்ள அவள் முயன்றாள். தப்ப முடியாத தந்திரத்தில் அசுர வேகத்தில் இயங்கினான் அந்த மூர்க்கன், நம்பிக்கைத் துரோகி காட்டுராஜா.

அவன் அப்படி நினைத்த கணத்தில் அவளது தனமானச் சுதாரிப்பு, தற்காப்பு எழுச்சி, வீரியம் எல்லாம் அவள் மேனியெங்கும் பீறிட்டுப் பாய்ந்து பெட்ரோல் பற்றிய பெரு நெருப்பாகி சுட்ட கணத்தில் தன் பற்களுக்கு எசவாயும், பாதுகாப்புக்கு வழியாயகவும், தப்பிக்கிறதுக்கு தகுந்த சந்தர்ப்ப மாகவும் சிக்கிக்கொண்டிருந்த அவனது கழுத்துத் தொண்டை முடிச்சில் தற்காப்பு வெறியேறியிருந்த தனது பற்களை பலம் கொண்ட மட்டும் அழுத்திக் கடித்தாள். கடித்துக் கொண்டே இருந்தாள்.

அனலாய் தகித்துக் கொண்டிருந்த அவனது காமக்குருதி பீறிட்டு பளீரென அவள் முகத்தில் தெரித்த நொடியில ஒரு சத்தம்...ஓலம்...அழுகுரலின் திணறல். ஆ...ஆ...ஆ....!? என்று கேட்டதும் அவனது ஆவேச மோகத்தின் பிடிகள் தளர்ந்தன.

சடாரென்று சுதாரித்துக் கிளர்ந்து எழுந்த அவளது பெண்மையும், பெண்ணியமும், தற்காப்பு என்கிற வீரியமும் குகையிலிருந்து சீறிப்பாயும் சிறுத்தையானாள். ஆம், அவள், சின்னம்மாள் என்கிற சின்னப்பொண்ணு, தன்னை, தனது தூய்மையை, கற்பை, கெட்டுப்போனவள், கற்பிழந்தவள் என்கிற மாசும் தூசும் தும்புகளும் இம்மியும் தன்மீது படரவிடாமல் காத்துக்கொண்ட பரிபூரணியாய் நடந்தாள்.

அவளது அண்ணன் எதிரில் வந்து கொண்டிருந்தது ஆறுதலையும், தேறுதலையும் தந்தது அவளுக்கு!.

●

# கரும்பின் தத்துவம்



பொங்கல் பண்டிகையின்போது கரும்புதான் முக்கிய பொருளாக அங்கம் வகிக்கும். இந்தக் கரும்பில் பெரிய தத்துவமே அடங்கியிருக்கிறது. கரும்பின் எல்லாப் பகுதியும் இனிப்பைத் தருவதில்லை.

நுனிக் கரும்பு லேசான இனிப்புடன் அதிக அளவில் உப்புக் கரிப்பதுபோலிருக்கும். ஆனால், அடிக் கரும்பு, மிகவும் இனிப்பாக இருக்கும்.

வாழ்க்கையில் மனிதர்கள் முன்னேற கடின உழைப்பு அவசியம். கடின உழைப்பு ஆரம்பத்தில் இனிமையைத் தராது. கஷ்டங்களையே கொடுக்கும்.

ஆனால் போகப்போக அடிக் கரும்பின் இனிப்பைப் போல அதிக வெற்றியையும் மகிழ்ச்சியையும் தரும். மேலும், கரும்பின் வெளிப்புறம் கரடு முரடாகவும், வளைவுகளும் ,முடிச்சுகளும் நிறைந்து இருக்கும் .

வெளிப்புறம் ஒரு கடினமான தோற்றத்தையே வெளிப்படுத்தும். கொஞ்சம் சிரமம் மேற்கொண்டு, உரித்து எடுத்தால்தான் உட்புறத்தில் இருக்கும் இனிமையான சாறு கிடைக்கும்.

அதுபோல வாழ்க்கையில் எத்தனை கடுமையான சோதனைகள் இருந்தாலும், அவற்றை கடும் முயற்சியோடு, அந்த கரடு முரடான பாதையை சலிப்பின்றி கடந்து சென்றால், இனிமையான வாழ்வைச் சுவைக்க முடியும் என்பது கரும்பு உணர்த்தும் தத்துவம்.

‘ பட்டினத்தார் கையிலுள்ள கரும்பு ‘ உணர்த்துவது இந்த தத்துவத்தைத்தான்.



கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் திரு. இனிகோ இருதயராஜ் அவர்கள் தலைமையில் கிறித்துவத் தலைவர்கள், அருட்தந்தையர்கள், போதகர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கிறிஸ்துமஸ் தினத்தன்று சந்தித்து கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டனர்.

---




சிறுபான்மையினர், தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், எழுத்தாளர்கள் மீதான வகுப்புவாதத்தை நிறுத்து என்ற தலைப்பில் எஸ் டி பி ஐ கட்சி கருத்தரங்கள் ஒன்றை இந்த ஆண்டு முதலாம் நாள் எழும்பூரில் உள்ள பாண்டியன் ஹோட்டலில் நடத்தியது. கருத்தரங்கில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தலைவர் திரு. இனிகோ இருதயராஜ், மே 17 இயக்கத்தின் தோழர் திருமுருகன், பாப்புலர் ஃப்ரண்ட் மாநிலத்தலைவர் முகம்மது இஸ்மாயில், பேராயர் எஸ்றா சற்குணம், பேராசிரியர் இராமு மணிவண்ணன் போன்றோர் கருத்துரை வழங்கினர்.

# இசையைப் போலவே இனிமையானவர்

# கிருஷ்ணா

எழுபத்து நான்காம் ஆண்டு வாக்கில் ஒலிப்பதிவுக்கூடங்களில் மின்சாரம் இருந்தால் தான் ஒலிப்பதிவு நடக்கும் என்ற ஒரு நிலை. ஜெனரேட்டர் என்று சொல்லக்கூடிய மின் ஆக்கிகள் அப்போது அதிகம் இல்லாத காலம். அந்த நாட்களில் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் திரையுலக இசைத்துறையில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தார்.

ஒலிப்பதிவுக்கூடங்களில் மின்சாரம் தடை பட்டால்தான் அவருக்கு ஓய்வு என்ற நிலை இருந்தது. அப்படிப்பட்ட ஒரு நாளில் மின்சாரம் தடைபட்டபோது எம்.எஸ்.வி ஓய்வாக கலைஞர் களுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவரது குழுவில் இசைக்கலைஞராகவும் சிறப்பு ஒலிகள் எழுப்பும் கலைஞராகவும் விளங்கிய சதன் அவர்கள் நகைச்சுவையாக பேசிக்கொண்டிருந்தார். அவரது திறமையை சக கலைஞர்கள் பாராட்டிக் கொண்டிருந்தனர். அப்போது சதன் "அண்ணா நான் என்ன பெருசா பண்றேன். நம்ம ஜோசப் கிருஷ்ணாக்கிட்ட வேலை செய்ற கிருஷ்ணா உங்கள மாதிரி நடிப்பான், உங்கள மாதிரி பாட்டு சொல்லிக் கொடுப்பான், நீங்க எப்படி ஒலிப்பதிவுக் கூடத்தில் நடந்து கொள்கிறீர்களோ அதை அப்படியே நடித்துக் காண்பிப்பான்" என்று சொன்னதும் கிருஷ்ணாவிடம் எங்கே நடித்துக் காட்டு என்று மெல்லிசை மன்னர் கூற, கிருஷ்ணாவோ தயங்கியிருக்கிறார். அவரோ விடுவதாக இல்லை. நீ நடித்துக் காண்பிக்கா விட்டால் என் குழுவிலே வேலை செய்ய முடியாது என்று திட்டவட்டமாகக் கூறவும், வேலை போய்விடுமே என்ற எண்ணத்தில் அவர் ஆர்மோனியம் வாசிப்பது போலவும் பாடகர் களுக்கு பாடல் சொல்லிக் கொடுப்பது போலவும் நடந்து வருவது போலவும் நடித்துக்காட்டி யிருக்கிறார் கிருஷ்ணா. அதைப் பார்த்துவிட்டு சிரிப்பை அடக்கமுடியாமல் சிரித்து கண்களில் நீர் வர அப்படியே அமர்ந்துவிட்டாராம். கிருஷ் ணாவை எப்போது பார்த்தாலும் "ஏதாவது புது ஐட்டம் வைத்திருக்கிறாயா?" என்று கேட்பது மெல்லிசை மன்னரின் வழக்கமாக இருந்தது.

ஒரு படத்தின் பாடலுக்கான கம்போஸிங். திரு. நாகேஷ், இயக்குநர்கள் திரு. கிருஷ்ணன் பஞ்சு, திரு. துரை, நடிகர் திரு. அசோகன் ஆகியோர் அங்கே இருக்க, மெல்லிசை மன்னர் திரு. நாகேஷ் அவர்களிடம் என்னோட குழுவுல ஒரு பையன் இருக்கான். அவன் நடிப்பப் பாத்தா நீங்க அசந்துடுவீங்க என்று கூறிவிட்டு, கிருஷ்ணாவை அழைத்து நடிக்கச் சொன்னாராம். கிருஷ்ணாவோ மெல்லிசை மன்னரைப் போன்றும் எம்.ஜி.ஆர், நம்பியார், அசோகன் போன்று நடித்துக் காட்ட, திரு. நாகேஷ் அவர்கள் வியந்து போய், "தம்பி எனக்கு நான்கரைக்கோடி ரசிகர்கள் இருக் கிறார்கள். ஆனால் நான் உனக்கு ரசிகன்" என்றாராம். இதுவே தனக்குக் கிடைத்த மிகப்பெரிய பாராட்டு என்கிறார் கிருஷ்ணா.



சில ஆண்டுகள் கழித்து தனது குழுவினரோடு பணிசெய்து கொண்டி



ருந்த மெல்லிசை மன்னர் கிருஷ்ணாவை அழைத்து, நாங்களெல்லாம் ஆர்மோனியம் வைத்து மெட்டுப் போடுகிறோம். நீ வாயாலேயே போட்டுவிடுகிறாய். நீ ஏன் இசையமைப்பாளராகக்கூடாது? என்று கேட்டதை மகிழ்ச்சியாக நினைவு கூர்கிறார் கிருஷ்ணா.

1969 ஆம் ஆண்டு சென்னை வந்த கிருஷ்ணா, வடபழனி விஜயா மருத்துவமனைக்கு எதிரில் உள்ள கிருஷ்ணபிரசாத் உணவகத்தில் வேலை செய்திருக்கிறார். இவரது நடிப்புத் திறமையை உணர்ந்த அந்த உணவு விடுதியின் உரிமையாளர் நீ திரைத்துறைக்குப் போ என்று ஊக்கப்படுத்தி யிருக்கிறார். இசைக்கலைஞர்களுக்கு உதவி செய்யும் புரடொக்சன் பாய் என்று சொல்லக்கூடிய மோகன் என்பவர் மூலம் மெல்லிசை மன்னரின் உதவியாள ராக இருந்த திரு. ஜோசப் கிருஷ்ணா அவர்களிடம் உதவியாளராக சேர்ந்திருக்கிறார் கிருஷ்ணா.



இம்மாதிரியான நடிப்புத் திறமைகள் இருந் தாலும், ஜோசப் கிருஷ்ணாவிடம் வேலை செய்தே வந்தார். இவரது வேலை என்னவென்றால், ஜோசப் கிருஷ்ணா அவர்களுக்கு, சாப்பாடு வாங்கித் தருதல், டீ, காபி வாங்கித் தருதல், அவர் வந்து போக வாகனம் ஏற்பாடு செய்து தருதல் போன்றவைதான். ஜோசப் கிருஷ்ணா தனியாக இசையமைக்கும் வாய்ப்பைப் பெற்றபோது, ஒலிப்பதிவிற்கான இசைக்கலைஞர்களை ஒருங்கிணைக்கும் பணியை தன்னிடம் வேலை பார்க்கும் கிருஷ்ணாவிடம் அவர் ஒப்படைத்தார். அதுமுதல் இசைக்கலைஞர்கள் ஒருங்கிணைப்பாளர் என்ற பொறுப்பை ஏற்று கிருஷ்ணா அவர்கள் இதுவரையிலும் பல இசையமைப்பாளர்களிடம் அப்பணியைச் செய்து வருகிறார்.



சிவப்பு மலர்கள் என்ற படத்தில் எஸ்.ஏ .சந்திரசேகர் அவர்கள் எம்.ஜி.ஆரைப் போல் நடித்தபோது அவருக்கு பின்னணிக்குரல் கொடுத்திருக்கிறார் கிருஷ்ணா. இதை எம்.ஜி.ஆர். கேட்டுப் பாராட்டியிருக்கிறார். என் தங்கை கல்யாணி படத்தில் நடித்திருக்கிறார்.

உயிருள்ள வரை உஷா திரைப்படத்தில் நாடகக் காட்சி ஒன்றில் துரியோதனனாக நடித்து அந்தப் பாத்திரத்திற்கு நம்பியார் குரலில் பேசியது வரவேற்பைப் பெற்றது.



1982ஆம் ஆண்டு பிரசாத் ஒலிப்பதிவுக்கூடத்தில் கன்னட இசை இரட்டையர்கள் ராஜன்நாகேந்திரா இசையில் திருமதி வாணிஜெயராம் அவர்களும் கர்நாடக ராஜ்குமார் அவர்களும் சேர்ந்து பாடுகின்ற ஒரு பாடல் ஒலிப்பதிவின் போது திருமதி வாணிஜெயராம் அவர்கள் ராஜ்குமாரிடம் கிருஷ்ணா உங்களைப் போல, எம்.ஜி.ஆரைப்போல பேசி நடிப்பார் என்று சொல்ல, ராஜ்குமார் நடித்துக் காட்டச் சொல்லியிருக்கிறார். சிறிது தயங்கிய கிருஷ்ணா பின் பேசி நடித்திருக்கிறார். அதில் எம்.ஜி.ஆர். பேசுவதாக, “ராஜ்குமார் நீங்க சொன்னா காவிரியில தண்ணீர் திறந்துவிடுவாங்க, நீங்க சொல்லுங்க“ என்றும் “சரி சொல்லுகிறேன்“ என்று ராஜ்குமார் பேசுவது போலவும் பேசிக் காண்பித்திருக்கிறார் கிருஷ்ணா.

கிருஷ்ணாவின் நடிப்பை பாராட்டியிருக்கிறார் ராஜ்குமார். அடுத்த நாள் ராஜ்குமாருக்கு எம்.ஜி.ஆரிமிருந்து அழைப்பு வந்திருக்கிறது. இவரும் சென்றிருக்கிறார். சென்றதும் முதல் நாள் கிருஷ்ணா கேட்டதைப்போலவே காவிரி பற்றி சொல்லியிருக்கிறார். ராஜ்குமார் அடுத்தநாள்



கிருஷ்ணாவைப் பார்த்தபோது இச்செய்தியைச் சொல்லியிருக்கிறார்.

ரிலையன்ஸ் 500 ரூபாய்க்கு செல்போன் கொடுத்த அந்த நேரத்தில், திடீரென்று இரவில் மெல்லிசை மன்னர் அவர்களது அழைப்பு கிருஷ்ணாவுக்கு. கிருஷ்ணா சங்கர்மகாதேவன் ஒரு பாட்டுப் பாடணும் அழைத்து வா என்றிருக்கிறார். அவர் சொன்ன தேதியில் ஒலிப்பதிவு நடந்தது விஸ்வரூபம் என்ற ஆல்பத்திற்கு. சங்கர் மகாதேவனின் திறமையை மிகவும் பாராட்டி யிருக்கிறார். பாராட்டியதோடு நில்லாமல் அவர் பாடிய அந்த பாடல் வரிகள் உள்ள அந்தத் தாளை வாங்கி ‘சங்கீதத்தோடு பாடிய சங்கர்மகாதேவன் வாழ்க!’ என்று எழுதியும் கொடுத்தாராம் மெல்லிசைமன்னர்.



1977 ஆம் ஆண்டு வெள்ளநிவாரணத்திற்காக நிதி திரட்டும் பொருட்டு மதுரை, திருச்சி, கோவை, தஞ்சை ஆகிய நகரங்களில் கலைநிகழ்ச்சிகள் நடந்த போது, மதுரையில் நிகழ்ச்சி தொடங்கும் முன் நாகேஷ் அவர்கள் மஞ்சுளா, லதா ஆகியோரிடம் இவர் எம்.ஜி.ஆர் போல் பேசி நடிப்பார் என்று சொல்லி அறிமுகப்படுத்த, அவர்கள் நடிக்கச் சொல்ல, உரிமைக்குரல் படத்தில் மாங்காய் பறிக்கும் அந்த காட்சியை கிருஷ்ணா நடித்துக் காட்ட அவர்கள் கிருஷ்ணாவை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

1979 ஆம் ஆண்டு, இயக்குநர்கள் ராபர்ட், இராஜசேகர் இருவரும் கிருஷ்ணா வீட்டிற்கு வந்து, கதை, திரைக்கதை, வசனம், இசை, இயக்கம் என்று எல்லாவற்றையும் டி.ராஜேந்தர் என்ற பையன் செய்கிறார். அந்தப் படத்தின் பாடல்களுக்கு இசைக் கலைஞர்கள், பாடகர்கள் தேவை. நீங்கள் அதைச்



செய்ய வேண்டும் என்று கூறி தி.நகர் சுதாரா ஹோட்டலுக்கு அவரை அழைத்துச் சென்றிருக் கிறார்கள். அங்கே டி. ராஜேந்தர் அவர்களை அறிமுகப்படுத்தி இருக்கின்றனர்.

அப்போது டி. ஆரின் வயது 23, கிருஷ்ணாவின் வயது 26. டி. ஆர் மரியாதையுடன் "வணக்கம் அண்ணே" என்று வரவேற்று அப்படத்தில இடம்பெற இருந்த ஒன்பது பாடல்களுக்கு பாடலுக்கு நான்கு மெட்டுகள் என்று கம்போஸ் செய்து வைத்திருந்த மெட்டுகளை பாடிக் காட்டினாராம். பிறகு ஏ.வி.எம்.சி. தியேட்டரில் முதல் பாடல் ஒலிப்பதிவு நடந் திருக்கிறது. எ.எ.ராஜ் என்பவர் இசை உதவியாளராக இருந்து அந்துப்பாடல் பதிவாகியிருக்கிறது. அந்தப் பாடலில் திருநங்கை போல் பாட புல்லாங்குழல் இசைக்கும் சுதாகர் அவர்களை அழைத்திருக்கிறார் கிருஷ்ணா, டி. ராஜேந்தரோ இன்னும் அதிகமான ஆட்கள் வேண்டும் என்று கூற, நீங்கள் பாடுங்கள் என்று கிருஷ்ணா கூறியிருக்கிறார். இந்தப் பாடல் ஒலிப்பதிவு ஆகிக் கொண்டிருக்கும்போது மின்சாரத் தடை ஏற்பட்டிருக்கிறது. புரொடக்சன் வேலை செய்யும் வீரப்பன், கிருஷ்ணாவிடம் இசையமைப்பாளர் கவலையாக ஒரு ஓரத்தில் கொண்டிருக்கிறார் வா என்று கூறி அழைத்துச்



சென்றிருக்கிறார். அங்கே எனது வாழ்க்கையே போய்விட்டது என்று மிகவும் வருத்தத்துடன் பேசியிருக்கிறார் டி. ஆர். கிருஷ்ணாவோ, இளை யராஜாவுக்கும் முதல் பாடலில் இப்படித்தான் நடந்தது. அவர் இப்போது கொடிகட்டிப் பறக்க வில்லையா? நீங்களும் அப்படி வருவீர்கள் என்று தேறுதல் கூறி ஒலிப்பதிவை தொடர்ந் திருக்கிறார்கள்.

அந்தப் பாடலை மலேசியா வாசுதேவன் அவர்கள் பாடியிருக்கிறார். அடுத்த நாள் விஜயா கார்டன் ஒலிப்பதிவுக்கூடத்தில் நான் ஒரு ராசியில்லா ராஜா என்ற பாடலை டி.எம். சௌந்தராஜன் பாடினாராம். அப்போது இது நல்ல பாடல் என்று பாராட்டிவிட்டுச் சென்றாராம். அடுத்தநாள் வாகினி எ ஒலிப்பதிவுக்கூடத்தில் என் கதை முடியும் நேரமிது என்ற பாடலை டி.எம்.எஸ்க்கு கொடுத்திருக்கிறார்கள். அதன் வரிகளைப் பார்த்துவிட்டு, கிருஷ்ணா இந்தப் பாட்டை நான் பாடமாட்டேன். எல்லாம் அறச் சொல்லாக இருக்கிறது. என்று மறுத்துவிட்டாராம். "நீங்கள் பாடாதா பாடலா? சட்டி சுட்டதடா கை விட்டதடா, போனால் போகட்டும் போடா, வீடுவரை உறவு என்று இது போல் பல பாடல் களைப் பாடியிருக்கிறீர்கள்.

நெருப்பு என்றால் சுட்டுவிடவா போகிறது, இந்தப் பாடலை பாடிக் கொடுங்கள் என்று கிருஷ்ணா கேட்க, எல்லாம் எம்பெருமான் முருகனுக்கே என்று கூறிவிட்டு, பாடலைப் பாடிவிட்டுச் சென்றாராம். பின்னாளில் இந்த இரண்டு பாடல்களும் எனது திரையிசை வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்துவிட்டது என்று அவர் பேட்டியளித்ததும் உண்டு.

டி.ராஜேந்தர் அவர்கள் பாடல் ஒலிப்பதிவிற்கு சிவமணியோ, ஏ.ஆர். ரகுமானோ இல்லை என்றால் அந்த ஒலிப்பதிவை நிறுத்திவிடுவாராம். அதைப் போலவே கிருஷ்ணா இல்லை என்றாலும் ஒலிப் பதிவு நடக்காதாம். ஒருதலை ராகத்தின் இரண்டாம் பாகம் ஒருதலைக் காதல் என்ற பெயரில் தயாரிக்கப்படுவதாகவும் அதற்கும் கிருஷ்ணா இசைக்கலைஞர்கள் ஒருங்கிணைப் பாளராக செயல்பட்டுக் கொண்டிருப்பதாகவும் கிருஷ்ணா கூறுகிறார். டி.ராஜேந்தருக்கு மட்டும் அல்லாமல் இதுவரை சங்கர் மகாதேவன் உட்பட 40க்கும் மேற்பட்ட இசையமைப்பாளர்களிடம் பணி புரிந்திருக்கிறார். இசைக்கலைஞர்களின் ஒருங்கி ணைப்பாளராக இன்றும் செயல்பட்டு வருகிறார் கிருஷ்ணா. ●

# மண் தோண்டிப் புதைத்தோம் முளைத்து எழு!

கவிஞர். தரா கார்த்திகை.



வாசலிலே பந்தலிட்டோம்
வாழை நட்டோம்
ஊதுபத்தி தலைமாட்டில்
ஏற்றி வைத்தோம்
விளக்கெரித்தோம்
போர் புரிந்த விருட்சமொன்று
சாய்ந்ததம்மா.

வாய்க்கரிசி கேட்டோம்
வீர முகம் பார்த்திருந்தோம்
வென்றவளே
ஆனையிறவில் நின்றவளே
அரசியலும் பெண்ணியமும்
வென்று தந்தவளே
வேளை வந்ததென்று
வேரறுத்து
வீதி சென்று
விம்மி விம்மி
வான்நோக்கிப் பார்த்தழுது
வாயடைத்து
வெறும் சுடலையிலே
விதைத்து வந்தோம்

என் அக்காச்சி தமிழினியை
போர் நிகழ்ந்த பூமியிலே
பெரு மண்தோண்டி
பெறுமதியைப் புதைத்து வந்தோம்.

தமிழினியே – நீ
தமிழர்களின் வரி இனியே
வரிப்புலியே
வங்கக் கடலுக்கப்பால்
வந்துதித்த
வற்றாத நெருப்புக் கனியே

பெண் குலமும் நிமிர்ந்து எழ
ஈழ மண்ணும் விழுந்து தொழ
விலங்குடைத்த
பெண்ணவளே
போர் தொடுத்து
பகை முடித்து
பார் முழுதும்
விடுதலைச் சிறகடித்து
விண்ணுடைத்து
வெளிச்சம் தந்த குலமகளே

வாயடைத்தோம்
விடைகொடுத்தோம்
வெட்டி வைத்த புதைகுழியில்
புதைத்து வந்தோம்

புகழ் கொடுத்த புரட்சியொன்றை
பாழ் கொடுத்து
சூரியனும்
சுகமிழந்த காற்றும்
சுற்றிவர
வெறும் சவம் என்னும்
புற்று நோய் பீடித்த
பிணமென்றும்
அறுந்தவர் கூடிப் பொய் உரைக்க
தமிழ்ப் புதையலைப்
புதைத்து வந்தோம்

பாட்டில்லை
பரணியும் பாடவில்லை
புலிக்கொடி போர்த்தவில்லை
பெருஞ் சரித்திரத்தை
சத்தமின்றி
சித்தமெல்லாம் சிதைந்து விழ

போர்ச் சித்திரத்தை
எங்கள் தமிழீழப் பத்திரத்தை
மண்தோண்டிப் புதைத்து வந்தோம்.

சந்தனத்துப் பேழைதனை – தமிழ்
சந்ததிகள் பார்த்து அழ
செந்தமிழே
சோழனின் செங்கொடியே
செம்பொறி தூக்கி
செருக்குடனே போரிட்ட
பிரபாகர முரசொலியே
மண்தோண்டிப் புதைத்து வந்தோம்
முளைத்து எழ
மண்தோண்டிப் புதைத்த வந்தோம்.

காலனே
கண்கெட்ட துட்டகைமுனுவின்
தோழனே
கெட்டவனே
இரக்கமில்லா சிங்கள தேசமே

சிறையும் அறையும்
சித்திர வதையும்
எமக்கொன்றும் புதிதல்ல
மிரளும் கேள்விகளும்
மிதியும்
கேவலமாய் நீ உரியும் ஆடைகளும்
எமக்கொன்றும் புதிதல்ல
கேவலம்! உமக்கே கேவலம்.

வேரறுத்தாய் என்று மார்தட்டு – நீ
வீரிட்டழும் காலம் வரும் காத்திரு.

கனத்துப் போன விழிகளுடன்
பெண் விடுதலைப் புலியொன்றை
விதைத்துப் போகிறோம்
சினத்துப் போய் எழும்.
சிங்கள தேசத்து
சிறை உடைக்கும்.

விடுதலைச் சிறகடித்து
அதிசயம் தரக் காத்திருக்கு.
காத்திரு!

●



## அன்று கேட்ட குரல்

வேரில்லா மரம் வாடும் நிலை போலவே... நாம்
வேதனையில் வாடுகின்றோம். யார் அறிவாரோ?
இறைவா! நீ அறிவாயோ?

அரும்பான எம் வாழ்வு தடுமாறியே
அலை மோதும் கடலாக நிலை மாறியே
கரை காணாக் கப்பலைப் போல் தவிக்க
வைத்தாயே– எம்மைக்
காலமெல்லாம் கண்ணீரில் கலங்க வைத்தாயே
இறைவா! இறைவா!!

பாலும் பழமும் உண்ட செல்வப் பசுங்கிளிகள் நாம் –
இன்று
பாதி வயிறு உண்பதற்கும் பாதை தேடினோம்
வளம் கொழிக்க வாழ்ந்த எங்கள் தாய்த்திருநாட்டில்
வாழ்வதற்கு வழியுமின்றி எங்கோ போகிறோம்
இறைவா! இறைவா!!

படைத்தவேன படியளப்பான என்றதும் பொய்யா?
வாழும் உலகில் எமக்கென ஓர் இடமே இல்லையா?
குலம் காக்கும் இறைவா கொஞ்சம் கருணையைக்
காட்டு – இல்லை
நிலமகளே! நீ எமக்குள் இரு கரம் நீட்டு....

**இணுவை சுசீலா**



# உண்மையைத் தேடி

முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பல உண்மைகள் முடக்கப்பட்டு, ஆரியரின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட அதிகாரிகளின் குழு உண்மைக் குற்றவாளியைப் பிடிக்காமல், தமிழர்களில் அனாதைகள், திக் கற்றோர், ஏழைகள் என பலரைச் சேர்த்து அவர் களுக்கு தண்டைனையும் கொடுத்துள்ளது. தமிழகத்தில் ஒரு சில காங்கிரசார் சூழ்ச்சியை அறியாமல் ராஜீவ்காந்தியை புலிகள் கொலை செய்து விட்டதாக கூறுகின்றனர். இது முற்றிலும் தவறுதலானது.

அதிகாரிகள் உண்மையை கூறுவதாக நாம் எண்ணினால், நடந்த இந்நிகழ்வு உண்மையா? 01.10.2012ல் சத்தியம் டி.வியில் சத்தியன் அவர்கள் நடத்திய சத்தியம் சாத்தியமே நிகழ்ச்சியில் ராஜீவ்காந்தி கொலை விசாரணை பற்றிய நிகழ்ச்சியில் திருச்சி வேலுசாமி, மே17, இயக்கத் தலைவர் திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது ரகோத்தமன் தொலை பேசியில் இணைந்து பேசும்போது, அவர் ராஜீவ் காந்தியை ஒருமையில் பேசினார். ஆனால் மரகதம் சந்திரசேகரை (கொலையில் முக்கிய குற்றவாளிகளில் ஒருவர் என்று சந்தேகத்திற்குரியவர்) மிக உயர்த்தி பேசினார். இதைப்புரிந்து கொண்ட சத்தியன், வேறு யாரும் கவனிக்காத வகையில் ரகோத்தமன் பேச்சை அத்தோடு நிறுத்தி விட்டு, விவாதத்தை வேறு வடிவில் எடுத்துச் சென்றார். இவ்வாறு முன்னாள் பாரத பிரதமரை கொச்சைப்படுத்தி ஒருமையில் பேசும் நபர் எப்படி சரியான முறையில் முழு அர்ப் பணிப்போடு நேர்மையாக சிறந்த விசாரணை யைச் செய்து இருக்க முடியும்? இன்றைக்கும் இச்செய்தி இணைய தளத்தில் உள்ளது. மேலும் விசாரணைக் குழுவின் தலைமை அதிகாரி கார்த்திகேயன் தன்னுடைய புத்தகத்தில் இன்றைய காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல்காந்தியை இரட்டை அர்த்தத்தில் மிகவும் கேவலமாக சித்தரிக்கின்றார். இதை வாசித்த நான் ஒருநாள் இரவு உறக்கத்தை இழந்தேன். ஆனால் காங்கிரசார் எப்படி இதை ஏற்றுக் கொள்கின்றனர் என்பது தான் புரியாத விந்தையாக உள்ளது. ஒருவேளை வெட்கப் படுவதும், கேவலப்படுவதும் நம் தலைவர்தானே! நாம் அல்லவே, அவமானப்படுவது நம் தலைவர்,

13 • இராஜாசிங்

நாம் அவர் பெயரால் நல்ல நிலையில் இருக்கின்றோமே என்ற பரந்த உள்ளத்தோடு செயல்படுகின்றனரோ அல்லது இதுதான் காங்கி ரசோ என்று நினைக்க தோன்றுகின்றது.

விசாரணை சரியாக, நியாயமான முறையில் நடைபெறவில்லை என உண்மையான காங்கிரஸ் காரர்கள் நினைத்ததினால்தான் ஜெயின் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த ஜெயின் கமிஷனும் விசாரணை சரியாக நடைபெறவில்லை. சரியாக பலரை விசாரிக்கவில்லை.

மோசடி நடைபெற்று கொண்டு இருக்கின்றது என்று தெளிவாக கூறியது. அதன்பின் எம்.டி.எம்.ஐ. பின்னர் அது கிடப்பில் போடப்பட்டது. நான்கு (4) பிராமணர்கள் கொலைசெய்திருக்கலாம் என்ற நிலையில் நான்காயிரம் பிராமணர்கள் ஒன்று திரண்டு மறைக்கின்றனர். இதில்தான் அவர்களது இன உணர்வு வெளிப்படுகிறது. உதாரணமாக சொல்லவேண்டும் என்றால், பிராமணரை தலைவராகக் கொண்ட கிரிக்கெட்டில் இதுவரை இந்திய கிரிக்கெட் அணிக்கு பிராமணர் அல்லாத வேறு எவரும் தமிழகத்தில் இருந்து தேர்வு செய்யப்படவில்லை.

ஆலயங்களில் அரசு சம்பளம் பெறும் புரோகிதர்கள் அனைவரும் பிராமணர் களே. அவர்கள் தலைமை ஏற்கும் இடங்களில் அவர்களின் ஆதிக்கம் கோலோச்சி இருக்கும். இதனால்தான் பெரியார் பார்ப்பனியக் கொள்கைகளை தெளிவாய் எதிர்த்தார் போலும். இந்த பெரியார் தான் நமக்கு சட்டை அணியும் உரிமையை பெற்றுத் தந்தவர். அன்று பெரியார் தமிழகத்தில் பிறந்து இருக்காவிட்டால், நாம் சட்டை அணியும் உரிமைக்காக இன்றுவரை போராடிக் கொண்டுதான் இருக்க வேண்டும். இன்று நாம் சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வர உதவியவர் பெரியார். பிராமணர்களுக்கு சமமாக உயர்ந்ததினால், காழ்ப்புணர்வோடு பெரியாரை எள்ளி நகையாடுகின்றனர். ஆரிய வழித் தோன்றல்கள், கற்பனையில் பல தவறுகளை அவர் மீது சுமத்துகின்றனர்.

பண்டைய காலத்தில் குமரிக்கண்டம் என்று ஒன்று இருந்து இருக்கின்றது. அது தமிழன் முழுமையாக வாழ்ந்த நிலப்பரப்பு, இயற்கையின் சீற்றத்தால் கடலின் உள்சென்று விட்டது. எஞ்சிய பகுதிகள் இன்று இந்தியாவுடன் இணைந்த தமிழகமாகவும், இலங்கையாகவும் காட்சியளிக்கின்றது. இந்த இரு பகுதிகளிலும் எம் மூதாதையர்கள், எம் முன்னோர்களாகிய தமிழ்குடிகள் வாழ்ந்து ஆட்சிபுரிந்தனர். பிற்காலங்களில் இலங்கையில், வட இந்தியாவில் இருந்து சிலர் வந்து குடியேறினர் என்று சுப்ரமணியசாமி, அத்வானி போன்றோர் கூறுகின்றனர். பன்னெடுங் காலத்தில் இருந்தே தமிழ் மன்னர்களால் இலங்கை ஆட்சிபுரியப்பட்டு வந்துள்ளது என தெளிவான வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன.

இப்படி யிருக்க, இராமர் இலங்கையை அழித்தார் என்று ஆரியர் கூறும் செய்தி, தமிழனைத்தானே அழித் தாக கூறுகின்றார்கள். அப்படி இருக்க எம் முன்னோரை என் மூதாதியரை என் தமிழ் இனத்தை அழித்த ஒருவரை எப்படி நான் கடவுளாக ஏற்க முடியும் என்பதினால் பெரியார் இராமருக்கு செருப்பு மாலை அணிவித்து, அக்கடவுளை செருப்பால் அடித்தார் போலும், கடவுள் மறுப்புக் கொள்கையை உடைய பெரியார், வட இந்தியாவில் இருந்து வந்த கடவுளான ராமரையும், பிள்ளை யாரையும் எதிர்த்தார்.

தமிழர்கள் வணங்கிய தமிழகத்திற்கு உரிய எந்த ஒரு கடவுளையும் எதிர்க்கவில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இதனால் தான் ஆரியர் இந்த உண்மையை மறைப்பதற்காக மாபெரும் குற்றத்தை தமிழர் மீது திணித்து, உலக அரங்கில் தமிழ் இனம் ஒரு கொடுமைக்கார இனம் என சித்தரித்து, பலரும் ஒதுக்கித் தள்ளும் அளவிற்கு தமிழ் இனத்தின் மீது காழ்ப்புணர்ச்சியை தோற்றுவித்து தமிழ் இனத்தை அழிக்க முற்படுகின்றனர் அவர்களின் இந்த முயற்சியை நம்மால் தெளிவாக தெரிந்துகொள்ள முடிகின்றது. உலகத்தில் இரண்டாவதாக அதிக அளவு கொடுமைப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்ட இனம் தமிழ் இனம் என்பது ஆராய்ச்சியா ளர்களின் ஆராய்ச்சியின் முடிவு.

இந்தியாவில் இருந்து, மராட்டிய மண்ணின் மைந்தர்களான சிவசேனா அமைப்பினர்களால் நடத்தப்பட்ட வெறியாட்டத்தால், அனாதையாக தமிழன் அடித்து துரத்தப்பட்ட நிகழ்வை, நம்மால் மறக்க முடியாது. இலங்கையில் நடந்த சதியால், தமிழன் சிறுகச் சிறுக வெளியேற்றப்பட்டு, சிறுபான்மையினர் ஆக்கப்பட்டு, பின்னர் அழிக்கப்பட்டான். இன்று திராவிடர் நாடு, வங்க தேசம் (சிந்து தேசம்) இந்து நாடு இணைந்து உருவான இந்தியாவிலும் தமிழன் உரிமையற்ற, நாதியற்ற மக்களாக ஆக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றனர்.

இந்தியாவின் ஆட்சியாளர்களால், உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், ஆந்திராவில்

செம்மரம் வெட்டுவதற்காக அழைத்து செல்லப்படும் தமிழக கூலி தொழிலாளிகள் கொல்லப்படு கின்றனர், சிறையில் அடைக்கப் படுகின்றனர். ஆனால் அவர்களை அழைத்துச் செல்லும் புரோக்கர்கள், செம்மரத்தை வாங்கி விற்கும் தரகர்கள் யாரும் கைது செய்யப்படுவது இல்லை. காரணம் அவர்கள் இந்தியர்கள் என்பதினால்.

கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியா வில் குடியேறிய ஆரிய இன மக்கள், தங்களது கடவுள், தங்களது கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் மாத்திரமே மதிக்கப்பட வேண்டும். தாங்கள் மாத்திரமே இறைவனின் தலையில் இருந்து தோன்றியவர்கள்.

மற்றவர்கள் அனைவரும் எங்களுக்கு கீழ ஆனவர்கள். அவர்கள் இறைவனின் கால் பாதம் மற்ற பகுதிகளில் இருந்து தோன்றியவர்கள் என்ற சித்தாந்தத்தை உடைய வர்கள். ஆகவே பிராமணர் அனைவரும் பிறர் தங்களுக்கு அடிமைகளாகவும், அடிபணிந்தும் வாழ வேண்டும் என்ற சிந்தனை, செயல் உடையவர்களாய் இங்கு வாழ்கின்றனர். இது திராவிடர்களின் பண்பாட்டு நாகரீகத்துக்கு எதிரானது. இதனால் தங்களது கருத்தை கல்வியின் மூலம் தமிழருக்குள் வஞ்சகமாய் புகுத்த முற்பட்டபோது, பெரியார் என்னும் மாமனிதர் அதை எதிர்த்து தமிழர்களையும், அவர்களது பண்பாட்டையும், நாகரிகத்தையும், கலாச்சாரத் தையும் காப்பாற்றினார். பெரியாரின் வழி வந்த பகுத்தறிவாளர்கள் வலுவான முறையில் ஆட்சி புரிந்து அவர்களின் பண்பாடு, நாகரிகம், கலாச் சாரம் ஆகியவற்றை தமிழகத்தின் உள் அனுமதிக்கவில்லை.

உண்மையில் ராஜீவ்காந்தி, ஏழைகளின்பால் அன்பு கொண்டு, அவர்களின் நிலை உயர வேண்டும் என்ற எண்ணம் கொண்டபோது இதை உணர்ந்த ஆரியர்கள், கீழ்தட்டு மக்கள் உயர்ந்தால், தங்களது நிலை உயராது என்ற உணர்வினால் அவரைக் கொலை செய்து, அப்பழியை தமிழர்களின் மீது திணித்து, பெரியாரின் வழியில் ஆட்சி செய்த தலைவர்கள் மீது அப்பழியை சுமத்தி, அவர்களை தமிழருக்காக வாதாட (போராட) விடாமல், அவர்களை தடுத்து, வந்தேறிகளான ஆரியர் (கலப்பினத்தவர்) தாங்கள் வணங்கிய பசுதான் கடவுள், திராவிட தமிழ் மக்கள் வணங்கிய கடவுள், கடவுள் அல்ல, என்ற புதிய முழக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

திராவிடத்தில் தமிழ் பேசும் மக்கள் ஆடு, மாடு, கோழி, பன்றி முதலிய விலங்குகளை பலியிட்டு, இயற்கை தெய்வங்களை வணங்கினார்கள். மேலே குறிப்பிட்டபடி முதலில் இறை நம்பிக்கை உள்ள தமிழனின் உரிமை பறிக்கப்பட்டது. இரண்டாவது, தமிழர்களின் கலாச்சாரம், பண்பாடு, (ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு) பறிக்கப்பட்டது. ஜல்லிகட்டாலும் மஞ்சு விரட்டாலும் விலங்குகள் சித்தரவதை செய்யப் படுகின்றன என்று காரணம் கூறி, நீதிமன்றம் தமிழ னுக்கு எதிரான கருத்தை வரவேற்று தடைவிதித்து உள்ளது. இது ஏற்புடையது என்றால், வீட்டு வளர்ப்பு பிராணியான நாய் பழக்கப்படுத்தப்பட்டு, காவல் துறையிலும், நாட்டின் பாதுகாப்பிலும் பயன் படுத்தப்படுகின்றதே. குதிரை, ஒட்டகம், கழுதை போன்ற விலங்குகள் பழக்கப்படுத்தப்பட்டு, நாட்டின் பாதுகாப்பில் ஈடுபடுகின்றன.

இது ஏன் இந்தியாவில் தடுக்கப்படவில்லை. இந்த ஐந்து அறிவு உள்ள மிருகம் பழக்கப்படுத்தப் படும்போது துன்புறுத்தலும், வேதனைக்குள்ளா வதும் இயற்கை யான நிகழ்வு. இவைகளை எல்லாம் அனுமதித்த இந்தியத் திருநாடு ஏன் தமிழர்களின் பண்பாட்டு நாகரீகத்தை அனுமதிக்கவில்லை?

தி.மு.க.தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழனுக்காக அதிக அளவு அக்கறை கொண்டு குரல் கொடுத்தவர். ஆரியர் வஞ்சகத்தின் சூழ்ச்சியால் ராஜீவ்காந்தி கொலையில் கலைஞரை சம்மந்தப்படுத்தி, அவர் மீது குற்றம் சுமத்தினார்கள், நாட்டின் தலையான அமைப்பான நீதிமன்றத் தினால், அன்று முதல் அவர் ஈழ தமிழ் மக்களுக்காக தம் குரலை ஓங்கி ஒலிக்க முடியாத சூழலை ஏற்படுத்தினர். மேலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசும் நிலைபாட்டில் இருந்து அவர் முடக்கப்பட்டார். இதனால் ஒரு வார்த்தை கூட இன்றுவரை பேசமுடியாமல் போனது. இன்று ஈழ மக்களுக்காக குரல் கொடுக்கும் பலர் இந்த சூட்ச மத்தை அறிந்து இருந்தும், இதற்காக குரல் கொடுக்கவில்லை என்பது தான் தமிழனுக்கு ஏற்பட்ட மிக பெரிய வேதனை. ஜெயின் கமிஷின், சிலரை சந்தேகிக்கின்றோம் என்று கூறி முதல் மூன்று பெயர்களை அறிவித்தது. 1. சந்திரா சுவாமி, 2. சுப்ரமணியசுவாமி, 3. டாக்டர் கலைஞர்.

பொன்னானது புடமிட்ட பின் சுத்தமாய் விளங்கும். அதுபோல கலைஞர் விசாரணைக்கு பின் உத்தமர் என்று நிரூபிக்கப்பட்டார். ஆனால் மற்ற இருவரும் இந்தியர்கள் (ஆரியர்) என்பதால் விசாரிக்கப்படவில்லை. மேலும் விசாரணை குழுவும் அதன் தலைவரும் சுப்ரமணியசாமியின் கட்டுப்பாட்டில்தான் இருந்தனர் என பின் நாட்களில் தெரிய வந்துள்ளது.

சுப்ரமணியசாமி முதலில் தான் ஒரு இந்தியன் என்பதை 10 பேருடன் சென்று இந்திய தேசிய கொடியை கச்சதீவில் ஏற்றி இலங்கை அரசுக்கு தன்னை அறிமுகம் செய்து கொண்டார். விடுதலைப் புலிகளுடன் கைகோர்க்க முயற்சி செய்து அம்முயற்சி தோற்றுப்போகவே புலிகளை பறையர் என கேவலமாக வசைபாடினார். பின்னர் இலங்கை அரசுடன் இணைந்து அவர்களின் உதவியுடன், புலிகளின் இயக்கத்தில் இருந்து தவறு செய்ததால் நீக்கப்பட்ட இளைஞர்களின் ஒத்துழைப்புடன், ராஜீவ்காந்தியின் கொலைக்கு காரணமாக இருந்தவர் சுப்ரமணியசுவாமி என்பது பலரின் கருத்து.

(உ.ம்) இந்திய அதிகாரிகள் இலங்கை சென்றவுடன் ராஜீவ் கொலையாளி சிவராசன், இரண்டு கண் உள்ள போது எடுத்த படமும், போரில் ஒற்றை கண் இழந்த பின் எடுத்த படமும், இலங்கையின் குடியுரிமை அதிகாரிகள் அவர் களுக்கு வழங்கினார்களாம். இது சற்று விந்தை யான செய்தி, ஏன் எனில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அப்பகுதியில் இலங்கை அரசும், இலங்கை ராணுவமும், அப்பகுதிக்கு செல்லமுடியாத சூழ்நிலையில் எப்படி இந்த போட்டோ கிடைத்தது? இன்று இலங்கையில் இருந்து வந்த தீவிரவாதிகள் தமிழகத்தில் (இந்தியாவில்) பிடிக்கப்பட்டும், அவர்களைப் பற்றிய செய்தி அறிந்து கொள்வதற்கு இலங்கைக்கு செல்ல விசாரணை அதிகாரிகள் அனுமதி கேட்டனர். ஆனால் இன்றுவரை அனுமதி கிடைக்கவில்லை. சுப்ரமணியசாமி பலமுறை இலங்கை சென்று வந்துள்ளார். இதனால் இலங்கையில் இருந்து தூண்டப்படும் தீவிரவாதத் தால் அரசியல் கொலைகள் தமிழகத்தில் நடக்கலாம் என நம்மால் யூகிக்க முடிகின்றது. இலங்கையில் சுதந்திரமாகத் திரியும் ராஜீவ்காந்தியின் கொலையில் முக்கிய குற்றவாளியாக விசாரணை அதிகாரியால் சுட்டிகாட்டப்பட்ட குமாரன் பத்பநாபா, இந்தியாவிடம் இன்றுவரை ஒப்படைக்கப் பட வில்லை. இதில் ஒளிந்துள்ள சூழ்ச்சிதான் என்ன?

ஜெயின் கமிஷனில் குற்றம்சாட்டப்பட்ட சந்திராசுவாமி ஓர் ஆயுத வியாபாரி என்பது அனை வருக்கும் தெரியும். குமரன் பத்மநாபன் முன்னாள் விடுதலைப்புலி இயக்க உறுப்பினர், விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கொள்முதல் செய்யும் செயலில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தவர். அவர் மீது எழுந்த புகாரின் அடிப்படையில் புலிகளின் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்டார். இது கே.பி. தொலைக் காட்சிக்கு அழித்த பேட்டி மூலம் தெளிவாய் தெரிகின்றது. அக்கால கட்டத்தில் சந்திராசுவாமி கே.பி.சந்திப்பு நடைபெற்று சில தொகைகள் கைமாற்றப்பட்டு, புலிகளின் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்ட சிவராசன் மூலமாய் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு உறுதுணையாக, மூளையாக செயல் பட்டவர் சுப்ரமணியசுவாமி. பின், காங்கிரஸ் அனுதாபத்தில் ஜெயிக்கும் எனத் தெரிந்து கொண்டு, அனுபவம் இல்லாத சோனியாகாந்தி தலைமை பொறுப்பு ஏற்ற வேளையில், தனக்கு ஆதரவான நரசிம்மராவை பொம்மைத் தலைவராக வைத்து, இந்திய அரசியலை ஆட்டிப்படைத்தார். ராஜீவ் காந்தி விசாரணையை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, தமிழர்களுக்கு ஆதரவான தலைவர்கள் அனைவரும் குற்றப்படுத்தப்பட்டனர். பின் நாட்களில் அதை அறிந்த காங்கிரஸ்காரர்கள், நரசிம்மராவுக்கு எந்த மரியாதையையும் செய்யவில்லை. இதை காங்கிரஸ்காரர்கள் கறுப்பு ஆட்சி என்று கூறுகின்றனர்.

இந்தியத் திருநாட்டில் ஏழைகளின் வாழ்வு முன்னேற தன் கொள்கையில் காந்தி உறுதியாய் இருந்தார். ஆரியர்களின் இயக்கம் இதைத் தாங்கி கொள்ள முடியாமல் கோட்சேயைத் தூண்டி, காந்தியைக் கொன்றது. அதேபோல் ராஜீவ்காந்தியும் இந்தியாவில் பல அடித் தட்டு ஏழை, எளிய மக்கள் வாழ்வு முன்னேற முழு மனதுடன் முயற்சி செய்தார். (உ.ம்) கணினியை இந்தியாவில் புகுத்தியது. இதனால்தான் சமூக, பொருளாதாரத்தில் மிக பெரிய மாற்றம் ஏற்பட்டது. இதனால் தங்களது நிலை உயராது என எண்ணியதினால், ராஜீவ் காந்தியை ஆரிய இயக்கம் சுப்ரமணியசாமியை தூண்டி விட்டு கொலை செய்து, அப்பழியை தமிழர்கள் மீது திணித்தனர் என்று கூறப்படுகிறது. இதனால் பிற்காலத்தில் 1,45,000 தமிழர்களை நாம் இழந்தோம். பல லட்சம் மக்கள் அகதிகளாய் ஏழைகளாய் உலகில் பல பகுதியிலும் சுற்றித் திரியும் அவலம் ஏற்பட்டது. பெரியார் அவர்கள், தன்னுடைய நுட்ப அறிவையும், தொலைநோக்கு பார்வையும், பயன்படுத்தி இந்த ஆரிய கூட்டச் செயலையும், அதன் நய வஞ்சகத்தையும் அறிந்து, பார்ப்பனனையும் பாம்பையும் ஒரு சேரக் கண்டால், முதலில் பார்பனனை அடி பின்பு பாம்பை அடி என்று கூறினார் போலும். இவ்வளவு வஞ்சனை நிறைந்தவர்கள் இந்த ஆரியர் கூட்டம்.

புதிய தலைமுறை தொலைக்காட்சியில் மொசாத் பற்றி கூறும் போது (இஸ்ரவேலின் உளவு நிறுவனம்) காத்திருந்து அழித்தல், அதன் வேலை என்று கூறியது. அதுபோல் ஆரியரும் தங்கள் செயலை பொறுமையாக காத்திருந்து தெளிவாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படி எனில்

உ.ம்.(ராஜீவ்காந்தியின் வருகையை சிவராசனுக்கு தெரிவித்தவர்). ராஜீவ்காந்தியின் கொலையன் போது எடுக்கப்பட்ட வீடியோவை மறைத்த இந்த மாபெரும் மனிதர்தான் எம்.கே.நாராயணன். இவர் ஆதிக்க சக்தியின் வலிமையால், மேலும் மேலும் உயர்ந்த பதவியை (நாட்டின் பாதுகாப்பு ஆலோசகர், மாநில கவர்னர்) அடைந்து கொண்டே சென்றார்.

இலங்கையில் சமாதானம் பேசுவது என்ற தொகுப்பு நூலில் 10 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் வெளியிடப்பட்டது. அதில் எம்.கே. நாராயணன் ஒரு கட்டுரை ஒன்றை எழுதி உள்ளார். அதில் விடுதலைப்புலிகளுக்கு வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் நிதியை கிடைக்காமல், வேரோடு பிடிங்கி எறிவது, விடுதலைப்புலிகளை அழிப்பதும் தான் தனது லட்சியம் என்று எழுதியுள்ளார். இவரின் உள்நோக்கம் தெளிவாக நமக்கு புரிகின்றது. இப்பேர்பட்ட மனிதரை சிறப்பு அழைப்பாளராக அழைத்து, இந்து நாளிதழின் நிர்வாகம், ‘இந்தியாவில் வசிக்கும் இலங்கை அகதிகளின் எதிர்காலம்’ என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தியது. ஆடு நனைகின்றது என ஓனாய் கவலைப்பட்டதாம். இலங்கையில் மீதி உள்ள கொஞ்சம் தமிழர்களையும் அழிப்பது, பின், மலேசியா, சிங்கப்பூர் தமிழர்களை அழிப்பது, அதன் பின் இந்தியாவில் உள்ள தமிழர்களை அழிப்பது என்று தமிழர்களை அழிக்க ஆரிய சமூகம் எப்படி எல்லாம் சூழ்ச்சியும், சூத்திரமும் வகுக்கின்றது என்று நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். மானமும், வீரமுள்ள தமிழன் அறந்தாங்கி பிரபாகரன் செருப்பை எறிந்து, நம் மானத்தை காப்பாற்றினார். பின்பு 06.11.2015 புதிய தலைமுறையில் மக்கள் மேடை என்ற நிகழ்ச்சியில் ஒவ்வொருவரும் பேசிய நிகழ்வும், தமிழக மக்களின் மனகொந்தளிப்பை வெளிக்காட்டியுள்ளது.

கலைஞர் 2009ஆம் ஆண்டு, உண்ணா நோன்பு அந்த வயதான காலகட்டத்தில் இருந்தார். ஆனால் அதை அனைவரும் தவறுதலாக அன்று எண்ணி னோம். ஆனால் அன்று ஆரியர்களால் கலைஞர் எவ்வாறு ஏமாற்றப்பட்டார். அந்த எம்.கே. நாராயணன் எவ்வாறு எல்லாம் செயல் ஆற்றி ஏமாற்றினார் என்பது இன்று இந்நிகழ்வை உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருந்தவர் களுக்கு புரிந்து இருக்கும். இந்திய அரசியலில் வெளி உறவுக் கொள்கைகள் அதிகாரிகளால் தான் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதற்கு, இச்செய்தி ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. எப்படி எனில் இலங்கை அரசு, புலிகளின் மீது போர்தொடுத்தபோது, இலங்கைக்கு வெற்றி கிட்டும் என்ற நிலைப்பாடு உருவானபோது, அதை முழுமனதுடன் கலைஞர் கருணாநிதி தடுக்க முற்பட்டபோது, அதன் தாக்கத்தை உணர்ந்த எம்.கே.நாராயணன் அன்றைய இந்திய உள்துறை அமைச்சகத்திற்கு தவறுதலான தகவலைத் தந்து, அதை பா.சிதம்பரத்தின் மூலம் கலைஞருக்கு செய்தியாக அனுப்பி, அவர் பாதையை திசை திருப்பி, சூழ்ச்சியினால், கலைஞரின் உண்ணா நோன்பு நிறுத்தப்பட்டது.

இந்த சலசலப்பு முடிவதற்கு முன் அந்தப் போரும் முடிந்து விட்டது. அன்றைய ஊடகங்கள் செய்தித்தாள்கள் அனைத்தும் இலங்கையில் நடந்த இவ்வளவு பெரிய இன அழிப்பை பெரிதுப் படுத்தவில்லை. இதற்கு காரணம் தமிழகத்தில் ஊடகத்திலும் செய்தித் தாள்களிலும், ஆரியரின் ஆதிக்கம் மேலோங்கி நிற்கின்றன. தந்தி டி.வியில் மேற்கு கரை என்ற தலைப்பில் வந்த (30- 11 - 15) நிகழ்ச்சியில் 2000 பாலஸ்தீனியர்கள் கொல்லப் பட்ட செய்தியை இது ஒரு மாபெரும் இன அழிப்பு என்று வெளியிட்டது அந்த டி.வி.நிர்வாகம்... உலக அரங்கில் இது கருத்தில் கொள்ளப்படவில்லை என எக்காள முழக்கம் இட்டு பல அறிஞர்களின் கருத்தையும் வெளியிட் டது. ஆனால் ஒன்றரை லட்சம் தமிழன் கொல்லப் பட்ட நிகழ்வுக்கு எந்த ஒரு கருத்தையும் வெளியிடவில்லை,

உண்மை நிலை வெளிப்படுத்த வில்லை, தமிழறிஞர்களின் கருத்துக்கள் கேட்கப் படவில்லை. அதற்கான ஆவணங்கள் அனைத்தும் இருந்தும் அதை பகிரங்கமாக இந்தியாவில் வெளியிடவில்லை தந்தி டி.வி.நிர்வாகம். அதன் தலைமை ஆசிரியரான பீகாரியரான பாண்டேயின் இந்த நிலையினால் இந்தியாவின் பிற மாநிலத்தவர் தமிழர்களின் உணர்வுகளை எவ்வாறு மதிக்கின் றனர் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இஸ்ரேலியர் களுக்கும், பாலஸ்தீனியர்களுக்கும் ஒரு நிலைப் பாடும், தமிழர்களுக்கென்றால் வேறுவி தமான நிலைபாட்டையும் இந்தியர்கள் எடுக்கின்றனர், இதுதான் இந்தியாவில் தமிழர்களின் நிலை.

முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். கலைஞர் அவர்கள் பா.சிதம்பரத்தின் மூலம் எம்.கே. நாராயணன், எவ்வாறு இந்த தவறுதலான செய்தியை இந்தியாவிற்கு அளித்தார் என்று நீதிமன்றத்தின் மூலம் வினவுவதால், தமிழகத்தின் பாமரன் கூட இச்சூழ்ச்சியை தெளிவாய் தெரிந்து கொள்வான் என்று நான் எண்ணுகின்றேன்.

இவ்வாறு சூழ்ச்சியை முறியடிப்பதன் மூலம் ஆரியரின் கனவுகளையும், தமிழன் தமிழகத்தில் அழிக்கப்படும் வஞ்சகச் செயலையும் நாம் தடுத்து நிறுத்தி விடலாம். ●



# மண்பானை அவசியமும், பொங்கல் பண்டிகையும்

புதுப்பானையில், மாக்கோலமிட்டு, மாவிலை, மஞ்சள், கரும்புத் தோரணம் கட்டி, அதிகாலையில் கதிரவனுக்குப் பொங்கலிட்டு.. 'பொங்கலோ..பொங்கல்' எனக் கூவும்போதே.. நாவினிக்கும் அனுபவம், அலாதியானது. இன்றையத் தலைமுறை தவறவிட்ட பல நல்ல விஷயங்களில், இத்தகையப் பாரம்பரிய முறையிலான பொங்கல் கொண்டாட்டமும் ஒன்று. ஆம், பொங்கல் பண்டிகைக்கு கரும்பு எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியமானது, பொங்கல் பானை. இந்தப் பொங்கல் பானையும் புதிய மண்பானையாகத்தான் இருக்க வேண்டும் என்பது மரபு. ஆனால், இன்றைக்கு..எவர்சில்வர், நான்ஸ்டிக் என்று விதம்விதமான பாத்திரங்களில்ஞ் கடமையே என்று பொங்கல் வைப்பதுதானே அதிகமாக நடக்கிறது.!மண்பானையில் வைக்கும் பொங்கலின் ருசிக்கு பக்கத்தில்கூட வரமுடியாது, எவர்சில்வர் மற்றும் குக்கர் பொங்கல். எவர்சில்வர், நான்ஸ்டிக் பாத்திரங்களில் செய்யும் சமையல், நோய் வருவதற்கான காரணங்களில் ஒன்றாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதேசமயம், மண்பானையில் சமைத்து உண்பது.. உடல் ஆரோக்கியத்தைக் காக்கிறது என்றும் சுட்டிகாட்டுகிறது ஒரு புள்ளி விவர அறிக்கை. இன்றைக்கு பல நகரங்களில் மண்பானை உணவகங்கள் அதிகரித்து வருவதுதான்

பானைக்குப் பதமான கரம்பை!"பானை செய்றது சாதாரணமான வேலையில்ல. அதுக்குப் பக்குவம் தெரியணும். எல்லா மண்ணுலயும் செஞ்சுட முடியாது. குளத்துல இருக்கற கரம்பையில மட்டும்தான் பானை பக்குவமா வரும். குளத்துக் கரம்பையை வெயில்ல காய வெச்சு, சின்னச் சின்னத் துண்டுகளா உடைச்சு கட்டி இல்லாம தண்ணியில கரைக்கணும். அப்படியே பொடி கல்லுகளையும் பிரிச்சு வெச்சுட்டாஞ் கொஞ்ச நேரத்துல கலவை தெளிஞ்சுரும். அதுல தண்ணிய வடிச்சு, கீழ இருக்கற கூழ் மாதிரியான கலவையை, நல்லா சலிச்ச ஆத்து மணலைப் பரப்பி, அது மேல ஊத்திவிடணும். அப்பதான், நிலத்துல இருக்குற கல்லு, மண்ணு இந்த கூழ்ல ஒட்டாது. அப்படியே ரெண்டு மணி நேரம் காயவிட்டுட்டு, உருட்டி மூடிவெச்சுட்டா மறுநாள் பானை செய்யுற பதத்துக்கு மாறிடும்.அவசியம் சேக்கணும் ஆத்து மணல்!அடுத்த நாள், ஒரு சட்டி களிமண்ணுக்கு மூணு கிலோங்கிற கணக்குல ஆத்துமணலைக் கலந்து காலால மிதிக்கணும். ஆத்துமணல் கலந்தாத்தான், பானை வெடிக்காம இருக்கும். நல்லா மிதிச்சு எடுத்த கலவையை திடுவைல (சக்கரம்) வைச்சு, சுத்தி பானையா பிடிக்கணும். கீழ்ப்பக்கத்தைக் கம்பியை வெச்சு அறுத்து தனியா எடுத்து, ரெண்டு மணி நேரம் காய வெச்சு அடிப்பகுதியில இருக்கற சொட்டைகள சரி பண்ணி, வெயில்ல காய வெக்கணும். பிறகு, செம்மண், போரஸ் பவுடர், மண்ணெண்ணெய் கலந்து பானையை சுத்தி சிவப்பு கலரைப் பூசி, ஆறு மணி நேரம் சூலையில வேக வைக்கணும். சூலையில புகை வெளிய போற மாதிரி அமைச்சுக்கணும். இல்லாட்டி பானை கருப்பாயிடும்.

மண்பானையிலே பொங்கல் மற்றும் சமையல் செய்வதைப் பற்றிப் பேசிய பாறைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பெண்கள், "நாங்க எப்பவுமே மண்பானைலதான் சமையல் செய்வோம். இப்பதான் எங்களோட பிள்ளைகள் அலுமினியம், எவர்சில்வர்னு சமையல் பண்றாங்க. மண்பானைலதான் உணவோட உண்மையான ருசி தெரியும். குறிப்பா மண்பானையில வெக்கிற மீன் குழம்புக்கு ஈடு இணையே கிடையாது. இதுல சமைக்குற உணவு சீக்கிரமா கெட்டுப் போகாது. மத்த பாத்திரங்கள்ல இருக்கற உணவுப் பொருள், வெயில்ல நீர்த்துப் போகும். ஆனா, மண்பானையில இருக்கற குளிர்ச்சியால நீர்த்துப் போக வாய்ப்பே இல்ல. மண்பானை தண்ணிய குடிச்சா நோய்கூட வராதுங்கிறதால நாங்க அதைத்தான் பயன்படுத்துறோம். கேரளாகாரங்க இங்க வந்து மீன்குழம்புச் சட்டினே மண்சட்டிகளை வாங்கிட்டுப் போறாங்க. அந்த அளவுக்கு அவுங்க மண்பானை, மண்சட்டிகளை விரும்புறாங்க. என்னதான் இப்ப எவர்சில்வர் வந்தாலும், மண்பானையில் பொங்கல் வெச்சு, ரெண்டு பக்கமும் பொங்கல் பொங்கி வர்ற, அழகைப் பாக்குறதே ஒரு சுகம்தானே"



# கிறித்தவரும் ஊரும் பேரும்

பாவலர் சீனி.சுந்தரமூர்த்தி

சில நூற்றாண்டுகளாகச் செந்தமிழ் நாட்டில் பரவிவரும் கிறத்துவ சமயத்தின் சார்பாக எழுந்த ஊர்களும் உணடு. நெல்லைச் சீமையில் கிறித்தவர் கள் மிகுதியாக வசிக்கும் பகுதிகளில் நாசரேத்து, சுவிசேசபுரம், மெய்ஞ்ஞானபுரம் முதலிய ஊர்கள் காணப்படுகின்றன.

சென்ற நூற்றாண்டில் ஆரோக்கியபுரம், சாந்தபுரம், சௌக்கியபுரம், சந்தோசபுரம், நீதிபுரம் முதலிய புத்தூர்களும் எழுந்துள்ளன. இரு நூறாண்டுகளுக்கு முன்னே தண்டமிழ் நாட்டில் கிறித்தவப் பெருந்தொண்டராக விளங்கிய வீரமாமுனிவர் கொள்ளிட ஆற்றின் வடகரையில் உள்ள ஏலாக்குறிச்சி என்னும் பழம் பெரும் ஊரின் ஒரு பகுதியில் அடைக்கல மாதா ஆகிய தேவ மாதாவுக்கு ஒரு கோயில் கட்டினார்.

அம்மாதாவின் அருட்காவலில் அமைந்த ஊருக்கு திருக்காவலூர் என்று பெயரிட்டார். திருக்காவலூரில் கோயில் கொண்ட மாதாவின் மீது ஒரு கலம்பகம் பாடினார். அந்நூலின் பெயர் திருக்காவலூர்க் கலம்பகம் என்பது.

வீரமாமுனிவர் காலம் முதல் வேதியர் என்னும் சொல் கிறித்தவ சமுதாயத்தில் உபதேசியார்களைக் குறிப்பதாயிற்று. அன்னார்க்குரிய ஒடுக்கமுறை களையெல்லாம் தொகுத்து, 'வேதியர் ஒழுக்கம்' என்னும் பெயரால் ஓர் உரைநடை நூலும் எழுதினார் முனிவர். வேதியர்புரம் என்ற ஊர் தெய்வ மணங்கமழும் தஞ்சாவூருக்குத் தென்கிழக்கே சுமாா எட்டு மைல் தூரத்தில அமைந்துள்ளது. கிறித்தவர்கள் வாழும் ஊராகவே அஃது இன்றும் விளங்கி வருகிறது.

நெல்லைச் சீமையில் டோனாவூர் என்னும் சிற்றூர் இந்நாளிற் சிறந்து விளங்குகின்றது. அவ்வூரின் பழமையான பெயர் புலியூர்க்குறிச்சி என்பதாகும். கிறித்தவ சமயம் நெல்லைச் சீமையிற் பரவத் தலைப்பட்ட போது கிறித்தவரானவர்கள் குடியிருந்து வாழ்வதற்காக புலியூர்க்குறிச்சியிலுள்ள மனைகளையும் நிலங்களையும் விலை கொடுத்து வாங்கினர் கிறித்தவ சங்கத்தார்.

அக்கிரையத் தொகையை செர்மானிய நாட்டைச் சேர்ந்த டோனா என்னும் பெருஞ்செல்வர் நன்கொடையாக அளித்தார். நன்றி மறவாத நெல்லையைச் சேர்ந்த கிறித்தவர் அவர் பெயரை அவ்வூருக்கு அமைத்த டோனாவூர் என வழங்கலாயினர்.

நெல்லையிலுள்ள மற்றொரு சிற்றூர் சாயர்புரம் என்று பெயர் பெற்றுள்ளது. அங்கும் கிறத்த வர்களே பெருந்தொகையினராக வசிக்கின்றார்கள். சாயர்புரத்தில் குடியிருப்புக்கேற்ற மனையிடங்களை விலைகொடுத்து வாங்கியவர் சாயர் என்னும் போர்ச்சுக்கீசிய வணிகர். கிறித்தவ சங்கத்தார் நெல்லைக்குச் செய்த பெரும் பணிகளை அவர் மன முவந்து ஆதரித்தார். சாயர் வழங்கிய பொருளால் எழுந்த ஊர் சாயர்புரம் என்று பெயர் பெறுவ தாயிற்று.

மேலே குறிப்பிட்டுள்ள எல்லா ஊர்களும் கிறித்தவ சமயத்தார் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. சம்பந்தமுடையன என்பது வெளிப் படை.

**கி.வெங்கட்ராமன்**
இணை ஆசிரியர், தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்

சாய்ஜிங் என்ற சீனப் பெண் இயக்குநர் இயக்கி வெளியிட்ட ***“மாடத்திற்குக் கீழே“*** (Under the Dome) என்ற ஆவணப்படம் அண்மையில் வெளியானபோது, அதனை ஐந்தே நாளில் ஐம்பது இலட்சம் பேர் பார்த்தார்கள்.

இந்த ஆவணப்படம் ஒரு தாய் தனது பள்ளி செல்லும் மகளை வீட்டை விட்டு வெளியில் விளையாட அனுமதிக்காமல் தடுத்து நிறுத்தியதன் காரணத்தை விளக்கும் போக்கில் விரிகிறது.

சீன நகரங்களில் எங்கும் பரவியிருக்கும் அடங்காத புழுதிப்படலங்கள் உள் இழுக்க தகுதியற்றவை, பல நோய்களை உருவாக்கும் ஆபத்து உண்டு என்பதால் தனது மகளை அத்தாய் வீட்டிற்குள்ளேயே பூட்டி வைக்கிறாள். இச்சிக்கல் பற்றி, அந்த ஆவணப்படம் விவாதிக்கிறது. (சீனாவின் புழுதிப்படலம் குறித்து இவ்விதழில் வேறொரு கட்டுரை விரிவாக விவாதிக்கிறது).

மக்கள் ஏதாவதொரு இன்றியமையாப் பொருள் கிடைக்காமல் திண்டாடினால், அந்தப் பற்றாக்குறைச் சூழலை தனது சந்தை வாய்ப்பாகக் கருதுவதுதான் முதலாளியம். மக்களுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு என்றால் அது தண்ணீர் முதலாளிகளுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. முதலாளியத்தின் சந்தை விதி அது!

இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் னால் குடி தண்ணீர் ஓர் விற்ப னைப் பொருளாகும் என்று நாம்கற்பனை செய்துகூட பார்த் திருக்க மாட்டோம். ஆனால், இன்று மாநகரங்கள், சிறு நகரங்கள் மட்டுமின்றி கிராமங்களில்கூட தண்ணீர் வணிகம் விரிவடைந்துவிட்டது. நடுத்தர, கீழ் நடுத்தர வர்க்க மக்களுக்கு மளிகைப் பொருள் பட்டியலில் குப்பித் தண்ணீரும் சேர்ந்துவிட்டது. வரும் 2018க்குள்

# அச்சுறுத்தும் காற்று வணிகம்
# காசு உள்ளவர்களே உயிர் வாழலாம்



இந்தியாவில் நடைபெறும் குடி தண்ணீர் வணிகம் 9 இலட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாயைத் தொடும் என அரசின் ஆய்வறிக்கைகளே கூறுகின்றன.

தண்ணீரைத் தொடர்ந்து இப்போது, சுவாசிக்கும் காற்றும் விற்பனைப் பண்டமாக மாறத் தொடங்கி விட்டது. இது மனித குலத்தைச் சூழ்ந்துள்ள மிகப்பெரிய ஆபத்தைக் குறிக்கிறது.

சீனாவின் தலைநகர் பெய்ஜிங் தொடங்கி அந்நாட்டின் பல்வேறு நகரங்கள் வாரக் கணக்கில் - மாதக் கணக்கில், புழுதிப்படலத்தால் சூழப்பட்டு பகலிலேயே வாகனங்கள் விளக்கு வெளிச்சம் பாய்ச்சி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அங்குள்ள காற்று மூச்சுவிடத் தகுதியற்றதாக மாறிவிட்டது. மூக்கில் பாதுகாப்புக் கவசம் அணிந்து செல்வது என்பதையெல்லாம் தாண்டி, மிகப்பெரும் அளவிற்கு தூசுப்படலத்தின் அடர்த்தி அதிகரித்ததால்தான் கடந்த 24.12.2015 அன்று சீன அரசு அபாய அறிவிப்பை (Red Alert) வெளியிட்டது.

இந்த அபாய அறிவிப்பு கனடா நாட்டின் ஓர் நிறுவனத்தை மகிழ்ச்சிக் கூத்தாட வைத்தது. 'வைட்டாலிட்டி ஏர்' (Vitality Air) என்ற கனடா நாட்டின் தனியார் நிறுவனம் இதுவரை யாரும் நினைத்துப் பார்த்திராத ஒரு வணிகத்தில் இறங்கியது. அதுதான் காற்று வணிகம்!

அந்த நிறுவனத்தின் 2 முதலாளிகளில் ஒருவரான மோசஸ் லாம் சீன அரசின் அபாய அறிவிப்பு வந்த நாளில் இலண்டன் மாநகரத்தில் தி டெலிகிராப் என்ற இதழுக்கு அளித்த செவ்வியில், "சீன மாநகரங்களில் நீங்காமல் நின்று நிலைத்துவிட்ட புழுதிப்படலங்கள் எங்களுக்கு ஓர் புதிய சந்தை வாய்ப்பாக அமைந்தன. இந்தச் சூழலைப் பயன்படுத்தி எங்கள் நிறுவனம் ஏற்கெனவே ஓர் கப்பல் நிறைய காற்று புட்டிகளை (பாட்டில்களை) சீனாவிற்கு அனுப்பிவிட்டோம். அது விரைவாக விற்றுக் கொண்டிருக்கிறது. காற்று வணிகத்திற்கு சீனா மட்டுமின்றி இந்தியா, துபாய் ஆகிய நாடுகளும் விரிந்த சந்தை வாய்ப்பை எங்களுக்கு வழங்குகின்றன. விரைவில் அந்த நாடுகளுக்கும் நாங்கள் எங்கள் காற்று வணிகத்தை விரிவாக்குவோம்" என்றார்.

இந்த காற்று புட்டிகள் இயல்பிலேயே எடைக் குறைவானவை என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒரு காற்று பாட்டில் எடை 15 கிராம்தான். எனவே, இந்த பாட்டில்களை இடுப்புப் பட்டையிலும் முதுகில் தொங்கவிட்டும் எளிதில் எடுத்துச் சென்றுவிடலாம். ஒரு காற்று பாட்டில் விலை இந்திய மதிப்பின்படி 1920 ரூபாய். "ஒரு பாட்டிலில் உள்ள தூயக் காற்றைக் கொண்டு 200 தடவை மூச்சு இழுக்கலாம்" என்று இந்த வைட்டாலிட்டி ஏர் நிறுவனத்தின் குப்பிகளில் அச்சடிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு தடவை மூச்சு இழுக்க ரூ. 9. 60.

இது எவ்வளவு பெரிய உயிர் வணிகம்!

"இப்போதைக்கு, தண்ணீரைவிட 50 மடங்கு உயர் விலையில் எங்களது தூயக் காற்று விற்பனையாகிறது. தேவை உயரும்போது எங்கள் வாடிக்கையாளர்கள் விலை உயர்வைப் பொருட்படுத்தாமல் இதை வாங்குவார்கள் என்று நம்புகிறோம்" என்கிறார் மோசஸ் லாம்.

உண்மைதானே! மூச்சுவிடாமல் உயிர் வாழ முடியாதது தானே! அதற்கு உயிர் வாழ விரும்பும் யாரும் காசு கொடுத்துதான் ஆக வேண்டும் என்றால் கொடுத்துத்தானே தீர வேண்டும்.

அதன் மறுபக்கம் என்ன? காசு கொடுத்து காற்று வாங்க வழியில்லாதவர்கள் சாக வேண்டும் என்பதுதானே!

முதலாளியத் தொழில் வளர்ச்சியும், அது வளர்த்துவிட்டுள்ள "வளர்ச்சி வாதமும்" (Growthism) எவ்வளவுக் கொடூரமானவை, மனிதகுலத்திற்கு எதிரானவை என்பதை இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும்.

இது ஏதோ சீன நாட்டின் சிக்கல் மட்டுமல்ல. அது இந்தியாவையும் தமிழ்நாட்டையும் விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஐ.நா.வின் உலக நலவாழ்வு நிறுவனம் (WHO) 2015 தொடக்கத்தில் வெளியிட்ட அறிக்கை, உலகின் தூய்மைக் கேடான 20 நகரங்களில் 13 நகரங்கள் இந்தியாவில் இருக்கின்றன என்றும், இந்நகரங்களின் தூசுப் படலம் அபாய அளவைத் தாண்டிக் கொண்டிருக்கிறது என்றும் எச்சரித்தது.

காற்று மண்டலத்தின் தூய்மை அளவை கணக்கிடுவதில் தூசு அளவு ஓர் முக்கியக் காரணியாகக் கொள்ளப்படுகிறது. இந்த தூசுப்படலங்கள் அவற்றின் சுற்றளவை வைத்து இரண்டு வகையாகப் பிரிக்கப் படுகின்றன. மிதக்கும்

தூசியின் சுற்றளவை வைத்து அவை $PM_{2.5}$, $PM_{10}$ என வகைப்படுத்தப் படுகின்றன. இதில், 2.5 என்பது 2.5 மைக்ரோ மில்லி மீட்டர் சுற்றளவுள்ள தூசுத் துகள்களைக் (Particulate Matter) குறிக்கும், 10 என்பது 10 மைக்ரோ மில்லிமீட்டர் சுற்றளவுள்ள தூசுத் துகள்களைக் குறிக்கும். (1 மைக்ரோ மில்லி மீட்டர் என்பது மில்லி மீட்டரில் நூறில் ஒரு பங்கைக் குறிக்கும்).

இந்த இரண்டுவகை தூசுத் துகள்களும் ஆபத்தானவைதான் என்ற போதிலும், $PM_{2.5}$ தூசுகள் மிக எளிதாக மூச்சுக் காற்றுடன் கலந்து உள்ளிழுக்கப் பட்டுவிடும். இந்த தூசுக் காற்றை சில மாதங்கள் சுவாசித்தால் ஆஸ்துமா நோயும், தொடர்ந்து சுவாசித்தால் நுரையீரல் புற்றுநோய் உள்ளிட்ட கொடிய நோய்களும் ஏற்படும்.

நாம் சுவாசிக்கும் காற்றில் இந்த $PM_{2.5}$ தூசு ஒரு கன மீட்டர் காற்றில் 25 மைக்ரோ கிராம் அளவுக்குள் இருந்தால், மனித உடலின் எதிர்ப்பு சக்தியே அவற்றை சரி செய்து கொள்ளும். அதற்குமேல் போனால், ஆபத்துதான்!

ஆனால், சென்னையின் காற்றின் மாசுபாட்டை அளந்து கூறிய தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கை, சென்னையின் கத்திவாக்கம், அண்ணா நகர், வள்ளுவர் கோட்டம், தியாகராயர் நகர் ஆகிய அனைத்து மையங்களிலும் 2015 ஏப்ரல் தொடங்கி நவம்பர் முடிய இருந்த மொத்தமுள்ள 243 நாட்களில் 233 நாட்கள் அபாய அளவைத் தாண்டிய தூசு மாசோடுதான் சென்னையின் காற்று இருந்ததை அறிவிக்கிறது. அதாவது, அபாய அளவைத் தாண்டிய தூசுக் காற்றைத்தான் மிகப்பெரும்பாலான நாட்கள் சென்னை மக்கள் சுவாசித்திருக்கிறார்கள்.

இப்போது பெரு வெள்ளப் பேரிடர் தாக்கியப் பிறகு, திசம்பரில் தூசு அளவு பல மடங்கு உயர்ந்திருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை. அன்றாடம் சாலையில் பயணிப்போர் அனைவரும் உணரக்கூடிய பேரிடர் இது!

உலகின் தூசு மாசு நிறைந்த நகரங்களில் முன்னணி வரிசையில் உள்ள நகரம் தில்லி. இப்போது, அங்கு அடுக்குமாடி வீடு கட்டும் முதலாளிகள், "எங்கள் அடுக்குமாடிக் குடியிருப்பில் மையப்படுத்தப்பட்ட காற்றுத் தூய்மையாக்கிகள் (Air Purifier) இணைக்கப்பட்டுள்ளன" என்று விளம்பரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். தூயக் காற்றுள்ள வீடு வேண்டுமானால் அதற்கு அதிக விலை கொடுத்தாக வேண்டும்.

உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் போன்ற வற்றில் காற்றுத் தூய்மையாக்கிகள் பொருத்தப்பட்டு அதற்கு தனியாகக் கூடுதல் கட்டணம் வசூலிப்பது தில்லியில் ஏற்கெனவே தொடங்கிவிட்டது. இது விரைவில் சென்னைக்கும் தமிழகத்தின் பிற பகுதி களுக்கும் வந்துவிடும்.

இது கற்பனையல்ல! தமிழகத்தை நெருங்கி வரும் ஆபத்து இது!

கடந்த 21.12.2015 அன்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் நலவாழ்வுத்துறை சார்பில் முன்வைக்கப்பட்ட ஓர் அறிக்கையில், சென்னையில் கடந்த சில ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு 863 பேர் மாசுபட்ட காற்றை சுவாசித்து, அதனால் ஏற்பட்ட நோயால் இறந்து வருகிறார்கள் எனக் கூறப்பட்டது. கடந்த ஆண்டில் மட்டும் மாசடைந்த காற்றை சுவாசித்ததனால் ஏற்பட்ட நோய்களுக்காக, சென்னையில் சிகிச்சைப் பெற்ற நோயாளிகளில் 4 இலட்சத்து 62 ஆயிரம் பேர் அபாய நோயாளிகள் என்று கண்டறியப் பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

ஏற்கெனவே முதுகில் தூக்கிச் செல்லக் கூடிய காற்றுத் தூய்மையாக்கிகள் சந்தைக்கு வந்துவிட்டன. இனி, வெளியில் செல்பவர்கள் கையில் ஒரு தண்ணீர் பாட்டிலை எடுத்துச் செல்வது போல், முதுகில் காற்றுத் தூய்மையாக்கிகளையும் சுமந்து செல்ல வேண்டும். எல்லாவற்றுக்கும் விலை உண்டு! அதுவும் காற்றின் விலை தண்ணீரைவிட பல மடங்கு அதிகமானது.

பணமுள்ளவர்கள் உயிர் வாழட்டும் என்ற கொடிய சந்தை வாழ்க்கையை வரவேற்கப் போகிறோமா அல்லது அதை மறுத்து வாழத் தகுந்ததாக நமது மண்ணைப் பாதுகாக்கப் போகிறோமா என்பதே நமது கழுத்தை நெருக்கிக் கொண்டிருக்கும் கேள்வி.

## நன்றி

தமிழ்த் தேசியத்
தமிழர் கண்ணோட்டம் 2016
சனவரி 1 – 15 (இதழ்)

**போகிப் பண்டிகை:**

மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது.இந்த பண்டிகை யின் பெயர் போக்கிப் பண்டிகை என்பதாகும். இது பின்னர் மருவி போகிப் பண்டிகை என்றாகி விட்டது. வீட்டில் உள்ள தேவையற்ற பொருள் களை அப்புறப்படுத்தி, வீட்டை சுத்தப் படுத்தி அசுத்தங்களை போக்குவதால் அது போக்கிப் பண்டிகை என்றழைக்கப்படுகிறது.

பொங்கலுக்கு முன் வீட்டிற்கு புது வர்ணம் பூசி வீட்டை அழகு படுத்துகிறார்கள். பொங்கல் சமயத்தில் வீடு புதுப் பொலிவுடன் காணப் படும்.இது கிராமங்களில் பொங்கல் சமயத்தில் காணக் கிடைக்கும் இனிய காட்சியாகும்.வீட்டின் வாசலில் மாக்கோலமிட்டு வாசலில் மாவிலை கட்டி பூஜைகள் செய்து இறைவனை வழிபடுவர்.

அது மட்டுமில்லாது, வீடுகளிலும் அரிசிக் கோலம், பெயிண்டுகளால் கோலமிட்டு அழகு படுத்துவது தமிழர் பண்பாடு.

**பொங்கல் பண்டிகை:**

இந்தப் பண்டிகை சூரியனுக்கு நன்றி தெரிவிக் கும் விதமாக கொண்டாடப்படும் பண்டிகை யாகும்.'பொங்கும் மங்கலம்' எங்கும் தங்கிட தமிழகத்தில் அனைவரும் கொண்டாடும் பண்டிகை பொங்கல்.

பொங்கல் தை மாதம் 1ம் தேதி, (ஜனவரி மாதம் 14ம் தேதி) கொண்டாடப்படும். இந்த தேதி என்றும் மாறுவதில்லை. வீட்டில் கோலமிட்டு, மாவிலை தோரணங்கள் கட்டி வீட்டை அலங்கரிப் பார்கள். பொங்கலுக்கு தமிழர் திருநாள் என்பதைப் போல் உழவர் திருநாள் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

# தமிழர் திருநாள் குறிப்புகள்



என்பதற்கேற்ப, உழவர் திருநாள் கொண்டாடப் படுகிறது.உழவர்கள் இந்தப் பண்டிகையை சிற்பாக கொண்டாடுவார்கள். வருடம் முழுவதும் வயலில் வியர்வை சிந்த உழைத்த உழவர்கள் பகலவனுக்கு நன்றிதெரிவிக்கும் விதமாக இந்த பண்டிகையை கொண்டாடுகிறார்கள்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' இது ஆன்றோர் வாக்கு. தை திருநாளில் இது வரை இருந்து வந்த துன்பங்கள் நீங்கி நல்வழி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பொங்கல் தினத்தன்று அடுப்பில் பொங்கல் பானை வைக்கப்பட்டு (முன் காலத்தில் மண்பானை உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. அதன் பின் வெண்கலத்தால் செய்யப்பட்ட வெண்கலப்பானை உபயோகப்படுத்தப்பட்டது. இப்போது அதுவும் போய் பெரும்பாலான இடங்களில் குக்கரே பயன்படுத்தப்படுகிறது) அதற்கு பொட்டு வைத்து, பானையைச் சுற்றிமஞ்சள் கட்டி அதில் பால் ஊற்றி சூடு படுத்தப்படும். பால் பொங்கி வந்ததும் குடும்பத்தினர் அனைவரும்' பொங்கலோ பொங்கல்' என கூறிபொங்கலை வரவேற்பர்.

தை மாதம் பிறக்கும் போது பொங்கல் பானை வைக்கப்படுவது தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கமாகும். சில சமயம் மாதம் அதிகாலைபிறக்கும். சில சமயம் மதியமோ அல்லது மாலையோ மாதம் பிறக்கும். சில சமயம் இரவு நேரத்தில் கூட மாதம் பிறக்கும். மாதம் பிறக்கும்நேரப்படி பொங்கல் பானை வைக்கப்படும்.பொங்கலின் சிறப்பம்சம் கரும்பும், மஞ்சள் கொத்தும். தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் கரும்பும், மஞ்சள் கொத்தும் விற்பனை செய்யப்படுவதைகாணலாம்.

பொங்கலன்று பால் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் ஆகியவை தயாரிக்கப் பட்டும். பொங்கல் தினத்தை முன்னிட்டு கோவில்களில் சிறப்பு பூஜை நடைபெறும். மக்கள் புத்தாடை அணிந்து பொங்கலை கொண்டாடு வார்கள்.

**மாட்டுப் பொங்கல் :**

உழவர்கள் ஆண்டு முழுவதும் தங்களுக்காக உழைத்த மாடுகளுக்கு நன்றி தெரிவித்து அவற்றைகும்பிட்டு பூஜை செய்யும் நாள். வீட்டிலுள்ள பசு, காளை மாடுகளை குளிப்பாட்டி கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி அவற்றிற்கு மாலையிட்டு, மஞ்சள் குங்குமம் இட்டு அவற்றை பூஜைசெய்வர். அன்று, காளை மாடுகளின் கொம்புகள் புதுப்பொலிவு பெறும்.மாடுகள் அழகாக அலங்கரிக்கப்பட்டு அவற்றின் கழுத்தில் சலங்கைகள் கட்டப்பட்டு அவை ஊர்வலமாக அழைத்து வருவர்.


தமிழகத்தில் பல பகுதிகளில் 'கணு' என்ற பெயரில் பொங்கலுக்கு அடுத்த நாள் கொண்டா டப்படுகிறது. முதல் நாள் செய்த பொங்கலுடன், சாதத்தில் குங்குமம், மஞ்சள் போன்றவை சேர்க்கப்பட்டு பல வண்ணங்களில் சாதம் செய்யப் பட்டு அவை பறவைகளுக்கு படைக்கப் படும்.

பொங்கலுக்கு சகோதரர்கள் தங்கள் சகோதரி களுக்கு அரிசி, பருப்பு,பணம் ஆகியவற்றை பொங்கல் சீராக கொடுப்பதும் நடந்து வருகிறது. அக்காலத்தில்அறுவடை முடிந்த பின் தங்கள் சகோதரிகளுக்கு பிறந்த வீட்டு சீராக நிலத்தில் விளைந்த அரிசி, பருப்பு போன்றவற்றை கொடுத்து தங்கள் மகிழ்ச்சியைபகிர்ந்து கொண்டார்கள். இப்போதும் இந்த பழக்கம் இருந்து வருகிறது.

**திருவள்ளுவர் தினம் :**

ஒன்றரை அடிகளில் வாழ்வியலுக்கு தேவையான வழிகளை போதித்தவர் திருவள்ளுவர்."அணுவைத் துளைத்து அதில் ஏழ் கடலை புகுத்தி குறுகத் தரித்த குறள்" என்று புகழப்பட்டது திருக்குறள். அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்றாக பிரித்து முக்கனியின் சுவையைப் போல், முத்தமிழின் சுவையைப் போல் தமிழர்களுக்குமட்டுமல்லாது, உலகுக்கே விருந்தளித்துள்ளார் வள்ளுவர்.

ஜனவரி மாதம் 15ம் தேதி தமிழகத்தில் திருவள்ளுவர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. திருவள்ளுவர் தினத்தன்று தமிழகத்தின் பல பகுதிகளிலும் திருக்குறள் போட்டி நடை பெறும். அரசு சார்பில் பல விழாக்களும் நடை பெறும்.



முற்றம் மாத இதழ்
வாசகர்கள் அனைவர்க்கும்
தமிழ்ப்புத்தாண்டு
பொங்கல் நல்வாழ்த்துகள்
– ஆசிரியர் குழு


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


விரிவுபடுத்தப்பட்ட மாளிகை
சிறப்பு தள்ளுபடிகளுடன்
பரவசமூட்டும் அனைத்து வித ஆடைகளும்
பள்ளிச் சீருடைகளை
வாங்கி மகிழ்ந்திட அழைக்கிறது
ராம்
டெக்ஸ்டைல்ஸ் A/c
135, நேரு வீதி, திண்டிவனம்.
அனைவர்க்கும்
புத்தாண்டு
பொங்கல்
நல்வாழ்த்துகள்
ராம்
டெக்ஸ்டைல்ஸ் A/c

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month



# மொழிப் போர் 50 மாநாடு

## மதுரை – தமுக்கம் கலையரங்கில்

**24.01.2016 ஞாயிறு, காலை 9:30 முதல் இரவு 8:30 வரை**

**ஆதிக்க மொழி தடுத்து அன்னைத் தமிழ் காத்திட ஐம்பதாண்டுகளுக்கு முன்**
**1965 மொழிப் போரில் இன்னுயிர் ஈந்த ஈகியர்க்கு வீரவணக்கம்!**

### மொழிப்போர் அரங்கம்

| 1916 – மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கம் | 1938 – பெரியார் – தமிழறிஞர்கள் நடத்திய முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் | 1965 – மொழிப்போர் |

### வளர்தமிழ் அரங்கம்

| ஆட்சித் தமிழ் | கல்வித் தமிழ் | கலைச் சொல்லாக்கம் | நாடகம் மற்றும் திரைத் தமிழ் | இசைத் தமிழ் | சூழலியல் தமிழ் | இந்திய ஒன்றிய ஆட்சி மொழிகள் | தொடர்பியல் தமிழ் |

### ஆன்மிக அரங்கம்

| சைவம் வளர்த்த தமிழ் | கிறித்துவம் வளர்த்த தமிழ் | இஸ்லாம் வளர்த்த தமிழ் |

- புகைப்படக் கண்காட்சி
- பாவரங்கம்
- இளந்தளிர் அரங்கம்
- பாராட்டரங்கம்
- கலை நிகழ்ச்சிகள்

*இனத்தைச் செய்தது மொழிதான் – இனத்தின்*
*மனத்தைச் செய்தது மொழிதான்*
– புரட்சிப்பாவலர் பாரதிதாசன்

அனைவரும் வாருங்கள்!

### பங்கேற்போர்

இரா. இளங்குமரனார், முனைவர் ம.இலெ. தங்கப்பா, முனைவர் த. செயராமன், முனைவர் பி. யோகீசுவரன், பா. செயப்பிரகாசம்,

முனைவர் இராம. சுந்தரம், பேரா. பிரபா. கல்விமணி, பேரா. அறிவரசன், முனைவர் மு. இராமசாமி, முனைவர் இராச. கலைவாணி, பூவுலகின் கோ. சுந்தரராசன், க. அருணபாரதி.

மு.பெ. சத்தியவேல் முருகனார், அமுதன் அடிகள், முனைவர் மு. அப்துல் சமது, இறைநெறி இமயவன், கி.த. பச்சையப்பனார், மா. பூங்குன்றன், வ. கவுதமன்.

இன்குலாப் (ஒலிப்பதிவு), கவிபாஸ்கர், இராசாரகுநாதன், செம்பரிதி, முழுநிலவன்.

**கி. வெங்கட்ராமன் | பெ. மணியரசன்**

## தமிழ்த் தேசியப் பேரியக்கம்

www.tamizhdesiyam.com +91 7667077075 fb.com / tamizhdesiyam பேச : 94433 93733, 94439 18095, 94433 03903